# தின பூமி

thinaboomi.com

பூமி: 21 சுற்று: 352 கார்த்திகை 29 | RNI Regn. No. 61494/94

வேலூர், திங்கள், டிசம்பர் 15, 2025 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00




**ஆஸ்திரேலியாவில் பயங்கரம்: இரண்டு மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 12 பேர் பலி**


....2-ம் பக்கம்

**திருவனந்தபுரம் மாநகராட்சியின் புதிய மேயருக்கான பரிந்துரை பட்டியலில் ராஜேஷ், ஸ்ரீலேகா**

...3-ம் பக்கம்

**2025-ம் ஆண்டின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் விருதை வெல்வாரா கோலி?**

....6-ம் பக்கம்





● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டியில் நடைபெற்ற, முன்னாள் அமைச்சர் பழனியப்பன் - ரோஜா தம்பதியரின் மகன் எழில்மறவன் மற்றும் சரவணன்-சாந்தி தம்பதியரின் மகள் கிருத்திகா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தினார். விழாவில் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், இரா.இராஜேந்திரன், அர.சக்கரபாணி, மா.சுப்பிரமணியன், விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் தொல்.திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் ஈஸ்வரன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

### நமக்கு ஓட்டுப்போடாதவர்கள் கூட

# தி.மு.க.வுக்கு வாக்களிக்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்

## திருவண்ணாமலை இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

திருவண்ணாமலை, டிச. 15-

**நமக்கு ஓட்டுப்போடாதவர்கள் கூட திமு.க.வுக்கு வாக்களிக்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நேற்று திருவண்ணாமலையில் நடைபெற்ற இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.**

**டைம் டிராவல்...**

திருவண்ணாமலையில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- மாஸா, கெத்தா... இங்கு வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம்; அமைச்சர் எ.வ.வேலுவிடம் வேலையை ஒப்படைத்தால் கவலைப்படவே தேவையில்லை. என்னதான் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் எ.வ.வேலுவுக்கு நன்றி கூறினாலும்; நானும் ஒருமுறை மீண்டும் நன்றி கூறுகிறேன். இளைஞர் அணி மாநாட்டை பார்க்கும்போது டைம் டிராவல் செய்து அரை நூற்றாண்டுக்கு பின்னோக்கி சென்ற உணர்வு ஏற்பட்டுள்ளது. உங்கள் எனர்ஜி எனக்கு வந்துள்ளது.

**திரும்பிப் பாருங்கள்...**

இளைஞர் அணியை வளர்த்தெடுக்க தமிழகம் முழுவதும் பயணம் செய்தோம். எடுத்தோம்; கவிழ்த்தோம் என எதையும் செய்யவில்லை. மக்களை சந்தித்து களத்தை வளர்த்தோம். சந்திக்காத தடைகள், துன்பங்கள், துரோகிகள் இல்லை. பிற்போக்கு கருத்துகள் தொற்று நோய் போல் பரவும். டீக்கடைகள், சலூன்கடைகளை அரசியல் மேடைகளாக மாற்றி மக்களுக்கு பகுத்தறிவு ஊட்டினோம். தாழ்ந்த தமிழகமே என கவலைப்பட்ட காலத்தை மாற்றி, இப்போது திரும்பிப் பாருங்கள் தமிழ்நாட்டை என சொல்லுகிற காலத்திற்கு நாம் வந்துள்ளோம்.

**மிகவும் ஆபத்தானவர்...**

உதயநிதி ஸ்டாலின் மிகவும் ஆபத்தானவர் என்று எதிரிகள் புலம்புகிறார்கள். தம்பி உதயநிதி தனது பொறுப்பை உணர்ந்து பவர் புல்லாக செயல்படுகிறார்; இன்னும் சொல்லப்போனால் இறங்கி அடிக்கிறார் உதயநிதி ஸ்டாலின். அரசியல் அறிவை, அறிவியக்கத்தை வளர்த்தெடுக்கிறார் உதயநிதி ஸ்டாலின். நல்ல அரசியலருக்கான அடையாளம் அதுதான். வலதுசாரிகள் ஆக்ரோஷத்துக்கு பதிலடி நமது கொள்கைகள் தான். ஒட்டுமொத்த நாட்டையும் காக்கும் கடமை நம்மிடம் உள்ளது.

**ஒன்றும் செய்ய முடியாது...**

பீகாரை போல தமிழ்நாட்டிலும் வெற்றி பெறுவோம் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா சொல்கிறார். அவருக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்கிறேன். 'அமித்ஷா அவர்களே உங்களுடைய சங்கிபடையையே கூட்டிட்டு வந்தாலும் உங்களால் இங்கு ஒன்றும் செய்ய முடியாது; தமிழ்நாட்டை வெல்ல முடியாது'.அன்பாக வந்தால் அரவணைப்போம், ஆணவத்தோடு வந்தால் அடிபணிய மாட்டோம். எதிர்த்து வென்று காட்டுவோம். நாட்டின் பன்முகத்தன்மையை காப்பாற்ற வேண்டிய கடமை நமக்கு உள்ளது.

**கடுமையாக உழைக்க...**

வரவிருக்கு சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற நீங்கள் (இளைஞர் அணி) அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும். தி.மு.க. அரசின திட்டங்கள், சாதனைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். நமக்கு ஓட்டுப்போடாதர்கள் கூட தி.மு.க.வுக்கு வாக்களிக்கின்ற நிலையை நீங்கள் ஏற்படுத்த வேண்டும். உங்கள் ஆதரவோடும்; மக்கள் ஆதரவோடும் தி.மு.க. மீண்டும் ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

### தமிழகத்தில் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில்

# விடுபட்ட தகுதியானவர்களுக்கு ரூ.ஆயிரம் நிச்சயம் கிடைக்கும்

## திருமண விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

தருமபுரி, டிச. 15-

**தமிழகத்தில் ஏற்கனவே 1 கோடியே 13 லட்சம் பேருடன் மொத்தமாக 1 கோடியே 30 லட்சம் பேருக்கு உதவித் தொகை வழங்கியுள்ளோம். இன்னும் தகுதியுடைய விடுபட்ட மகளிர்க்கும் நிச்சயம் வழங்கப்படும் என்று தருமபுரியில் நடந்த முன்னாள் அமைச்சர் பழனியப்பன் இல்ல திருமண விழாவில் தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், தேர்தலுக்கு இன்னும் கொஞ்ச நாள்தான் உள்ளது. நமது சாதனைகள், திட்டங்கள், பணிகளை மக்களுக்கு கொண்டு சென்று வாக்குகளாக மாற்ற வேண்டும். 7-வது முறையாக திராவிட மாடல் ஆட்சி வந்தது என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.**

**முன்னாள் அமைச்சர்...**

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி. பழனியப்பன் இல்லத் திருமண விழா நேற்று பாப்பிரெட்டிப் பட்டி அருகேயுள்ள மோளையானூர் கிராமத்தில் நடைப் பெற்றது. விழாவுக்கு தலைமை தாங்கிய தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், மணமக்கள் எழில்மறவன்-கிருத்திகா திருமணத்தை நடத்தி வைத்தார்.

**எனக்கு ஒரு ரிலாக்ஸ்**

பின்னர் முதல்வர் மு.க. ஸ்டாலின் மணமக்களை வாழ்த்தி பேசுகையில், "தொடர்ந்து அரசு நிகழ்ச்சிகள், புதிய, புதிய திட்டங்களை தொடங்கி வைக்கக்கூடிய நிகழ்ச்சிகள், அது மட்டும் இல்லாமல் கட்சியின் நிகழ்ச்சிகள், ஆய்வுக் கூட்டங்கள், கழக குடும்பங்களில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகள் இப்படி பல்வேறு நிகழ்ச்சிகள். இவ்வாறு ஏராளமான நிகழ்ச்சிகளுக்கு இடையில் உங்களை எல்லாம் பார்க்கும் வகையில் நடைபெறக்கூடிய இந்த மணவிழா நிகழ்ச்சியால் எனக்கே ஒரு ரிலாக்ஸ் ஏற்பட்டுள்ளது.

**17 லட்சம் பேருக்கு...**

சென்னையில் 'வெல்லும் தமிழ் பெண்கள்' என்ற தலைப்பில் ஒரு மாபெரும்

(கடைசி பக்கம் பார்க்க)

### தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகள் நிறைவு:

# டிசம்பர் 19-ல் வெளியாகிறது வரைவு வாக்காளர் பட்டியல்

சென்னை, டிச. 15-

**வாக்காளர் சிறப்பு திருத்தப்பணிகள் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் வரும் 19-ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது.**

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் (எஸ்.ஐ.ஆர்.) கடந்த நவம்பர் 4-ம் தேதி தொடங்கின. இந்தப் பணியின்போது ஒவ்வொரு வாக்காளருக்கும் வீடுவீடாகச் சென்று கணக்கீட்டு படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வழங்கி வந்தனர். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தனர்.

எஸ்.ஐ.ஆர். களப்பணிகள் முடிவடையும் தேதியை இந்திய தேர்தல் ஆணையம் 2 முறை நீட்டிப்பு செய்து உத்தரவிட்டது. அதன்படி இந்த பணிகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முடிவடைந்தன. வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்களை 100 சதவீதம் வழங்கி, அவற்றை திரும்ப பெற்று, அவை முழுவதையும் வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள் ஏற்கனவே பதிவேற்றம் செய்து விட்டனர்.

இந்த பதிவுகளின் அடிப்படையில் வரைவு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிற 19-ம் தேதி வெளியிடப்படுகிறது. பின்னர் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கும், திருத்தங்களை மேற்கொள்வதற்கும் ஒரு மாத கால அளவுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. பிப்ரவரி மாதத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

### நாட்டிலேயே 5 லட்சம் நிர்வாகிகளை கொண்ட

# ஒரே இளைஞர் அணி தி.மு.க. இளைஞர் அணி மட்டும்தான்

## துணை முதல்வர் உதயநிதி பெருமிதம்

சென்னை, டிச. 15-

**நாட்டிலேயே 5 லட்சம் நிர்வாகிகளை கொண்ட ஒரே இளைஞர் அணி தி.மு.க.இளைஞர் அணி மட்டும்தான் என்று துணை முதல்வர் உதயநிதி பெருமிதம் தெரிவித்துள்ளார்.**

திருவண்ணாமலை அருகில் உள்ள மலப்பாம்பாடியில் அமைந்துள்ள கலைஞர் திடலில் நேற்று தி.மு.க. இளைஞரணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. சுமார் 2 லட்சம் பேர் பங்கேற்கும் வகையில் பிரமாண்டமாக இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த சந்திப்பு நிகழ்ச்சி தி.மு.க. தலைவரும், முதல்வருமானா மு.க.ஸ்டாலின், இளைஞரணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. வடக்கு மண்டலத்தில் உள்ள ஒரு லட்சத்து 30 ஆயிரம் இளைஞர் அணி நிர்வாகிகளை ஒரே இடத்தில் ஒருங்கிணைத்து அவர்களை சந்தித்து தேர்தல் பணி செய்வது குறித்து கட்சியின் தலைவர் மற்றும் கட்சியின் மூத்த நிர்வாகிகள், எம்.பி., எம்.எல்.ஏ.க்களை கொண்டு ஆலோசனைகள் வழங்கிட இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:- இந்திய அளவில் 50 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள், 5 லட்சம் நிர்வாகிகளைக் கொண்ட ஒரே இளைஞர் அணி நம் கழக இளைஞர் அணி மட்டுமே. 2026 தேர்தலில் மீண்டும் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களே முதல்வர் ஆவார். திராவிட மாடல் அரசின் சாதனைகள் தொடரும் என்பதை உறுதி செய்யும் வகையில் திருவண்ணாமலையில் எழுச்சியுடன் நடக்கவிருக்கிறது. ஒன்று கூடுவோம். வென்று காட்டுவோம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெரும்பிடுகு முத்தரையரின் நினைவு சிறப்பு தபால் தலை

## துணை ஜனாதிபதி வெளியிட்டார்

புதுடெல்லி, டிச. 15-

**தமிழக மன்னர் பெரும்பிடுகு முத்தரையரின் நினைவு சிறப்பு தபால் தலையை துணை ஜனாதிபதி சி.பி.ராதா கிருஷ்ணன் நேற்று வெளியிட்டார்.**

தமிழக மன்னர் பெரும்பிடுகு முத்தரையரின் நினைவாக தபால்தலை வெளியிட வேண்டும் என முத்தரையர் சமுதாயம் சார்பில் நீண்டகாலமாக கோரிக்கை இருந்து வந்தது. தமிழக அரசு சார்பில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மெய்யநாதன் இது தொடர்பாக சமீபத்தில் மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூக்கு கடிதம் எழுதியிருந்தார். இதற்கிடையே தமிழக பா.ஜனதா தலைவர் நயினார் நாகேந்திரனும் முயற்சிகள் மேற்கொண்டார்.




இந்த நிலையில் பெரும்பிடுகு முத்தரையரின் நினைவு தபால் தலை வெளியீட்டு விழா டெல்லியில் நேற்று நடைபெற்றது. இதில் தபால் தலையை துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்டார். அதன் பின்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் பேசியதாவது:- பிரதமர் மோடியின் தொலைநோக்குத் தலைமையின் கீழ், தமிழ் மொழி மற்றும் பண்பாட்டிற்கு மத்திய அரசு தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகிறது. காசி தமிழ் சங்கமம் போன்ற முயற்சிகளையும், இதுவரை உரிய அங்கீகாரம் பெறாத தமிழ் அரசர்கள், தலைவர்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களை அடையாளம் கண்டு கவுரவிக்கும் முயற்சிகளுக்கு எனது பாராட்டுகள்.

பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் நினைவுத் தபால் தலையை வெளியிட்டது தொடர்ச்சியான அங்கீகார முயற்சிகளின் ஒரு பகுதியாகும். இந்தியா 'விக்சித் பாரத்' நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், மறைக்கப்பட்டத் தலைவர்களை அங்கீகரிப்பது நாட்டின் பண்பாட்டு பெருமையை மீட்டெடுக்க உதவும் என அவர் கூறினார். இந்நிகழ்ச்சியில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் எல்.முருகன், தமிழக பா.ஜனதா தலைவர் நயினார் நாகேந்திரன், ராஜ்ய சபா துணைத் தலைவர் ஹரிவன்ஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கடலோர தமிழகத்தில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பு

## வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, டிச. 15-


**கடலோர தமிழகத்தில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று (15-12-2025) கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். உள் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

நாளை (16-12-2025) கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நாளை வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலையில் பொதுவாக பெரியமாற்றம் ஏதுமில்லை. எனினும், சற்று குறையக்கூடும். தமிழகத்தில் குறைந்த பட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2-3 டிகிரி செல்சியஸ் இயல்பை விட குறைவாக இருக்கக்கூடும் இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 449.43 | 148.40 |
| பாயின்ட் 85,267.66 | பாயின்ட் 26,046.85 |



**தங்கம்**

1 சவரன் ₹98,960

1 கிராம் ₹12,370



**வெள்ளி**

1 கிலோ ₹210,000

1 கிராம் ₹210.00

**டாலர்** ₹90.58

**பெட்ரோல்** ₹100.75

**டீசல்** ₹92.34



### ஆஸ்திரேலியாவில் பயங்கரம்:

# இரண்டு மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 12 பேர் பலி

**சிட்னி, டிச. 15-**

ஆஸ்திரேலியாவில் 2 மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 12 பேர் பலியான சம்பவம் அங்கு பெரும் பரபரப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.



ஆஸ்திரேலியாவின் நியுசவுத் வேல்ஸ் மாகாணத்தின் சிட்னி நகரில் போண்டி என்ற இடத்தில் உள்ள கடற்கரை மிகவும் பிரபலமானதாகும். விடுமுறை நாட்களில் இந்த கடற்கரையில் மக்கள் கூட்டம் அலைமோதும். அந்த வகையில் ஞாயிற்றுக்கிழமையான நேற்று மக்கள் கடற்கரையில் பொழுதைக் கழித்துக்கொண்டிருந்த நிலையில், அங்கு வந்த இரண்டு மர்ம நபர்கள் கண்மூடித்தனமாக துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர். இந்த துப்பாக்கி சூட்டில் 12 பேர் பலியாகியுள்ளனர். ஆஸ்திரேலியாவை உலுக்கியுள்ள இந்த சம்பவத்திற்கு அந்நாட்டு பிரதமர் அந்தோனி அல்பனீஸ் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "துப்பாக்கி சூடு சம்பவம் அதிர்ச்சியும் வேதனையும் தருகிறது. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு உயர் அதிகாரிகள் சென்றுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் குறித்தே எனது எண்ணம் உள்ளது. அங்குள்ள காவல் அதிகாரிகளுடன் பேசி, சூழல் குறித்த தகவல்களை பெற்று வருகிறேன்.

துப்பாக்கி சூடு நடைபெற்ற இடம் அருகே உள்ள மக்கள் போலீசாரின் அறிவுறுத்தலைப் பின்பற்ற வேண்டும்" என பதிவிட்டுள்ளார். துப்பாக்கி சூடு நடத்தியவர்கள் யார்? பயங்கரவாத நோக்கத்துடன் தாக்குதல் நடத்தப்பட்டதா? என்பது குறித்து அந்நாட்டு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். துப்பாக்கி சூடு நடத்திய நபர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவரை பிடித்து போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

### காசாவில் இஸ்ரேல் தாக்குதல்:

# ஹமாஸ் முக்கிய தளபதி பலி

**காசா சிட்டி, டிச. 15-**



காசா முனையில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. காசா சிட்டியில் சென்ற காரை குறிவைத்து டிரோன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் ஹமாஸ் ஆயுதக்குழுவின் முக்கிய தளபதி ரயிட் சயத் கொல்லப்பட்டார்.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தியது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டது. 2 ஆண்டுகள் நடந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனை தொடர்ந்து நடைபெற்ற பேச்சுவார்த்தையில் போர் நிறுத்தம் அமலுக்கு வந்துள்ளது.

இந்நிலையில், காசா முனையில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. காசா சிட்டியில் சென்ற காரை குறிவைத்து டிரோன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் ஹமாஸ் ஆயுதக்குழுவின் முக்கிய தளபதி ரயிட் சயத் கொல்லப்பட்டார். மேலும், ஹமாஸ் ஆயுதக்குழுவை சேர்ந்த மேலும் 4 பேர் உயிரிழந்தனர். கொல்லப்பட்ட ஹமாஸ் தளபதி ரயிட் சயத் 2023 அக்டோபர் 7ம் தேதி நடந்த தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

# சிரியாவில் ராணுவ வீரர்கள் உட்பட அமெரிக்கர்கள் 3 பேர் படுகொலை

### பதிலடி தரப்படும் என ட்ரம்ப் சூளுரை

**வாஷிங்டன், டிச. 15-**

சிரியாவில் ராணுவ வீரர்கள் உட்பட 3 அமெரிக்கர்கள் படுகொலை சம்பவத்திற்கு நிச்சயம் பதிலடி தரப்படும் என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் அமெரிக்க ராணுவ வீரர்கள் ஈடுபட்டு இருந்தனர். அப்போது மர்ம நபர் ஒருவர் அவர்களை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினார். இந்த தாக்குதலில் 2 அமெரிக்க ராணுவ வீரர்கள் மற்றும் அமெரிக்க உரைபெயர்ப்பாளர் ஒருவர் என 3 பேர் பலியானார்கள். 3 வீரர்கள் காயமடைந்தனர்.

இதுபற்றி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசும்போது, எங்கள் மீதும், சிரியா மீதும் ஐ.எஸ்.ஐ.எஸ். தொடுத்த தாக்குதல் இது. உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கின்றோம். அவர்களுக்காகவும், அவர்களின் பெற்றோர் மற்றும் அன்புக்குரியவர்களுக்காகவும் நாங்கள் வேண்டி கொள்கிறோம் என கூறினார்.

இதற்கு நாங்கள் பதிலடி தருவோம் என அதிபர் ட்ரம்ப் சூளுரைத்து உள்ளார். காயமடைந்த அவர்கள் சிகிச்சைக்கு பின்னர் குணமடைந்து வருகின்றனர்.

இந்த தாக்குதலை நடத்திய தனிநபர் ஒருவர் அமெரிக்க படைகளால் கொல்லப்பட்டு விட்டார். அவரை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது. சிரியாவின் இடைக்கால ஜனாதிபதி அகமது அல்-ஷரா, வெள்ளை மாளிகையில் சில வாரங்களுக்கு முன் ட்ரம்புடன் பேச்சுவார்த்தை நடத்திய நிலையில், இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டு உள்ளது.

# லிபியாவில் இந்திய தம்பதி கடத்தல்

**டிரிபோலி, டிச. 15-**

லிபியாவில் 3 வயது குழந்தையுடன் இந்திய தம்பதி கடத்தப்பட்டனர். போர்சுகலுக்கு செல்ல அவர்கள் முயற்சித்தபோது கடத்தப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்க இந்திய மதிப்பில் ரூ.2 கோடி பிணைத் தொகை கேட்டி கடத்தல் கும்பல் மிரட்டல் விடுத்துள்ளது.

கடத்தப்பட்டக் குடும்பத்தினர் குஜராத் மாநிலம் மேஷனா மாவட்டத்தைச் சேர்ந்த கிஷம்த்சின் சாவ்டா, அவரது மனைவி ஹீனா பென் மற்றும் மகள் தேவன்சி எனத் தெரிகிறது. இவர்கள் கடந்த நவம்பர் 29-ம் தேதி குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் இருந்து துபாய்க்கு விமானத்தில் சென்றனர். அங்கிருந்து லிபியாவின் பென்காசி நகருக்குச் சென்றனர். அங்கிருந்து அவர்கள் அடுத்த விமானத்தைப் பிடிக்க வேண்டிய இடத்துக்குச் செல்லும் வழியில் கடத்தப்பட்டுள்ளனர்.

இந்தக் குடும்பத்தினர் போர்சுகலில் குடியேற விரும்பி அங்குள்ள ஒரு புரோக்கர் மூலம் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். கிஷமத்தின் சகோதரர் ஏற்கெனவே போர்ச்சுகலில் தான் இருக்கிறார். அதனால் அங்கேயே தானும் குடும்பத்துடன் சென்றுவிட கிஷ்மத் திட்டமிட்டிருக்கிறார்.

இந்நிலையில் இவர்கள் கடத்தப்பட்டுள்ளனர். கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தினரை தொடர்பு கொண்டு ரூ.2 கோடி பிணைத் தொகை கேட்டுள்ளனர். இது குறித்த தகவல் மேஷனா மாவட்ட ஆட்சியருக்கு தெரியவர, அவர் மூலம் அது வெளியுறவு அமைச்சகத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த ஆண்டு ஜூலை மாதம் நைஜர் நாட்டில் ஒரு கட்டுமான நிறுவனத்தில் ஒப்பந்தப் பணியாளராக இருந்த ஜம்மு காஷ்மீர் மாநிலம் ரம்பான் மாவட்டத்தைச் சேர்ந்த ரஞ்சித் சிங் என்ற இந்தியர் ஆயுதம் தாங்கிய கும்பலால் கடத்தப்பட்டார். மேலும் இரண்டு பேர் கொல்லப்பட்டனர் என்பது நினைவுகூரத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# தென் ஆப்பிரிக்காவில் கோவில் இடிந்து இந்தியர் உள்பட 4 பேர் பலி

**கேப்டவுன், டிச. 15-**

தென் ஆப்பிரிக்காவில் கோவில் இடிந்து விழுந்த விபத்தில் இந்தியர் உள்பட 4 பேர் பலியாயினர்.

தென் ஆப்பிரிக்காவின் வாசுலு நட்டல் மாகாணம் டர்பன் நகரில் உள்ள மலைப்பகுதியில் இந்து மத வழிபாட்டு தலமான நரசிம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் கட்டுமான பணிகள் நடைபெற்று வந்தது. இதில், 10க்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், கட்டுமான பணியின்போது திடீரென கோவில் மேற்கூரை இடிந்து விபத்துக்குள்ளானது. இந்த சம்பவத்தில் கட்டிட பணியில் ஈடுபட்டிருந்தவர்கள், பக்தர்கள் உள்பட 4 பேர் உயிரிழந்தனர்.

இதில் விக்கி ஜெய்ராஜ் என்ற இந்தியரும் அடக்கம். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இடிபாடுகளுக்குள் ஒரு நபர் சிக்கி இருக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளதால் மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# இந்திய ரூபாய் நோட்டுகளை அனுமதிக்க நேபாளம் முடிவு

**காத்மாண்டு, டிச. 15-**

இந்திய ரூபாய் நோட்டுகளை மீண்டும் அனுமதிக்க நேபாளம் முடிவு செய்துள்ளது.

இந்தியாவின் அண்டை நாடுகளில் ஒன்றான நேபாளத்தின் பொருளாதாரம், சுற்றுலா வருவாயை நம்பியே உள்ளது. அந்த நாட்டின் மிகப்பெரிய சுற்றுலா வருவாயாக இந்திய சுற்றுலா பயணிகள் இருந்து வருகின்றனர். அங்கு இந்திய ரூபாய் நோட்டுகளை பயன்படுத்தி பணப்பரிவர்த்தனையில் ஈடுபடுவது அமலில் இருந்தநிலையில் 2016-ம் ஆண்டுக்கு பின்னர் அதற்கு தடைவிதிக்கப்பட்டது.

ரூ.100 மதிப்புடைய ரூபாய் நோட்டுகள் கீழான மதிப்புடைய காசுகள் ரூ.10, ரூ.20 மற்றும் ரூ.50 நோட்டுகளுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதுவும் அதிகாரப்பூர்வமற்ற முறையில் அனுமதிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில்தான், ரிசர்வ் வங்கி மேற்கொண்டுள்ள சில திருத்தங்களையடுத்து, இந்திய ரூபாய்களை மீண்டும் அனுமதிக்க நேபாள மத்திய வங்கி முடிவு செய்துள்ளது. இதன்படி, ரூ.100 மற்றும் அதற்கு மேல் மதிப்புடைய ரூ.200, ரூ.500 இந்திய பணநோட்டுகளை பயன்படுத்தி நேபாளத்தில் பரிவர்த்தனை செய்ய முடியும்.

# நேபாளத்தில் திடீர் நிலநடுக்கம்


**காத்மண்டு, டிச. 15-**

நேபாளத்தில் 4.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.;

நேபாளத்தில் நேற்று திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. மதிய 12.39 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.3 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 28.32 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 84.14 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

**15-12-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** மனைவியின் ஒத்துழைப்பு மனமகிழ்ச்சி தரும். கோடைகால இன்பச் சுற்றுலாப் பயணங்கள் இனிமை தரும். நல்ல வாகன யோகம், நல்ல வருமானம் ஆகியவை ஏற்படும்.

**ரிஷபம்:-** புதிய திட்டங்கள், யோசனைகள் கைகொடுக்கும். கூட்டாளியை அனுசரித்துச் செல்வது நல்லது. சிறந்த ஆலோசகராகத் திகழ்வீர்கள். புதிய சொத்துக்கள் அமையும்.

**மிதுனம்:-** குழந்தைகளால் சந்தோஷம் நிலவும். அழகிய மனைவி அமைவாள். கல்வியில் தடைகள் ஏற்படலாம். வெற்றிக்கு வழியில்லாத வகையில் ஏமாற்றங்களும் ஏற்படும்.

**கடகம்:-** எல்லோரையும் சந்தேகப்படும் குணத்தை விட்டால் சந்தோஷ மிக்க வாழ்க்கை அமையும். அன்னையின் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுங்கள். பயந்த நிலையும் ஏற்படும்.

**சிம்மம்:-** வெற்றிப்படி ஏறி வீருநடை போடுவீர்கள். பாக்கிகள் வசூலாகி தனவரவு அதிகரிக்கும். புதிய நண்பர்களால் இன்பமும் ஏற்றங்களும் ஏற்படும். மனத்தெம்பும் மகிழ்ச்சியும் நிலவும்.

**கன்னி:-** அதிக பணவரவுக்கான புதிய வழிகள் தென்படாது. ஒரு பக்கம் வருமானக் குறைவும், மறுபக்கம் கடன் தொல்லையும் மனசஞ்சலம் தரும். வழக்குகளால் வெட்டிச் செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்:-** பயணங்கள் இனிமை தரும். வாகன வசதிகள் பெருகும். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். தனலாபம் அதிகரிக்கும். வியாபாரத்தில் இலாபமும், தொழிலில் முன்னேற்றங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** மனைவி தேவையற்ற பொருட்களை வாங்கச் சொல்லி தொல்லை தருவாள். அலுவலகத்தில் பணிச்சுமை காரணமாக உணவு உண்ணவும் நேரம் இராது. குறிக்கோளற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**தனுசு:-** பலவகைகளிலும் பணவருமானம் வந்து குவியும். பிறருக்கு உதவும் நல்லெண்ணம் எழும். திருமண ஏற்பாடுகள் நடக்கலாம். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு.

**மகரம்:-** சந்தோஷம் மிக்க நாளாக அமையும். பெண்கள் விருப்பப்படி அவர்கள் விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். அரசுப் பணியாளர்களுக்கு ஆணையிடும் அதிகாரபதவி கிடைக்கலாம்.

**கும்பம்:-** தொட்டதெல்லாம் துலங்கும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். தெய்வீக காரிய ஈடுபாடு மனதில் அமைதி அளிக்கும். அரிய சாதனைகள் புரிந்து புகழடைவீர்கள்.

**மீனம்:-** உங்கள் பாதையில் தடைகளும், தடங்கல்களும் ஏற்படும். எல்லா திசைகளிலும் ஏற்படும் போட்டியின் காரணமாக வியாபாரத்தில் ஆதாயம் குறையும்.. மனைவியின் செயலால் உறவுகளே பகையாகும்.

### விழாக்கோலம் பூண்ட திருவண்ணாமலை:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மக்கள் எழுச்சிமிகு வரவேற்பு

**திருவண்ணாமலை,டிச. 15-**

திருவண்ணாமலைக்கு நேற்று வருகை தந்த முதல்வர் ஸ்டாலினுக்கு பொது மக்கள், நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

திருவண்ணாமலையை அடுத்த மலப்பாம்பாடியில் உள்ள கலைஞர் திடலில் தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி நேற்று மாலை 4 மணி அளவில் பிரமாண்டமாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கட்சியின் இளைஞர் அணி செயலாளரான துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்குகினார்.

நிகழ்ச்சியில் தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு எழுச்சியுரையாற்றினார். முன்னதாக திருவண்ணாமலைக்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மாவட்ட எல்லையான மேல்செங்கத்தில் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது.

மேளதாளங்கள் முழங்க, சாலையின் இருபுறமும் திரண்டிருந்த கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொது மக்கள் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

நிகழ்ச்சி திடலுக்கு செல்லும் வழியில் பிரமாண்டமாக வரவேற்பு நுழைவு வாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. மண்டலங்கள் வாரியாக நடைபெறும் இந்த தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு வடக்கு மண்டலத்தில் இருந்து தொடங்கப்பட்டு அதுவும் திருவண்ணாமலையில் முதலில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

முதல்வரின் வருகையையொட்டி நேற்று திருவண்ணாமலை விழாக்கோலம் பூண்டிருந்தது.

# த.வெ.க. வேட்பாளர்கள் அறிவிப்பு குறித்து புஸ்ஸி ஆனந்த் விளக்கம்

**திருச்செங்கோடு,டிச. 15-**

த.வெ.க.வின் வேட்பாளர்களை தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் மட்டும் தான் அறிவிப்பார்" என அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தெரிவித்தார்.

த.வெ.க. பிரச்சார பொதுச் செயலாளரான அருண் ராஜ், திருச்செங்கோடு தொகுதியில் போட்டியிடுவார் எனவும், அவரை மூத்த தலைவர்களான செங்கோட்டையன் மற்றும் புஸ்ஸி ஆனந்த் ஆகியோர் நேற்று அறிமுகப்படுத்துவார்கள் எனவும் தகவல் வெளியானது.

இந்த நிலையில், திருச்செங்கோட்டில் நேற்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், "ஒவ்வொரு தொகுதியிலும் தலைவரின் அறிவுறுத்தலின்படி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நேற்று முன்தினம் சோழிங்கநல்லூர், திருச்செங்கோட்டில் (நேற்று) நடைபெற்றது.

இங்கே நான் ஒன்றை தெளிவுப்படுத்த விரும்புகிறேன். த.வெ.க.வின் வேட்பாளர்களை தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் மட்டும் தான் அறிவிப்பார். ஊடகவியலாளர்கள் தயவு செய்து எதையாவது ஒன்றை போட்டுவிடாதீர்கள். வரும் 2026-ம் ஆண்டு தேர்தலில் த.வெ.க. தலைவர் விஜய் முதல்வராக வருவார்.

த.வெ.க. தலைவர் விஜய்யை முதல்வராக அமர வைக்கும் வேலையை செங்கோட்டையன் செய்வார். செங்கோட்டையன் சொல்வதை நாங்கள் செய்வோம். எந்த கட்சியாவது எங்களைப்போல் மாநாடு நடத்த முடியுமா. மற்ற கட்சிகள் எல்லாம் ரூ.200, ரூ.300 கொடுத்து தான் கூட்டம் கூட்ட வேண்டும். ஆனால் விஜய் வருகிறார் என சொன்னால் கூட்டம் தானாக வந்து சேரும்.

ஈரோட்டில் வரும் 18-ம் தேதி த.வெ.க. கூட்டம் நடைபெற உள்ளது. அன்று செங்கோட்டையன் கலக்குவார். மக்கள் த.வெ.க.வுக்கு ஓட்டுப்போட தயார். செங்கோட்டையன் தன்னிடம் பலர் செல்ஃபி எடுப்பதாக மேடையில் கூறினார். அதற்கு தலைவர் விஜய் தான் காரணம். தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் தலைவர் விஜய் தான் வேட்பாளர்.

அனைத்து தொகுதிகளிலும் த.வெ.க. வெற்றி பெறுவதற்கு அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டும். தலைவர் விஜய் உச்சத்தை விட்டுட்டு வந்துள்ளார். தமிழக மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என உச்சத்தை விட்டுட்டு வந்துள்ளார். தமிழகத்தில் புயல் என எந்த பாதிப்பு வந்தாலும் த.வெ.க. பாடுபடும். தமிழகம் இக்கட்டான சூழலில் உள்ளது. தமிழகத்தை மாறி மாறி ஆட்சி செய்து ஏமாற்றி விட்டார்கள் என மக்கள் நினைக்கின்றனர். அதன் வெளிப்பாடு தான் இங்கு கூடியுள்ள கூட்டம்.

யாருக்காவது தைரியம் இருந்தால் கூட்டம் போடுங்கள், அனைவரும் வாருங்கள் என சொல்லுங்கள் வருவார்களாக என பார்ப்போம். ஆனால் த.வெ.க. தலைவர் விஜய் வந்தால் கூட்டம் தானாக வந்துவிடும். மின்கட்டண உயர்வால் விசைத்தறிக் கூடங்கள் மூடுவிழா கண்டுவிட்டது.

கூடிய விரைவில் த.வெ.க.வுக்கு அருமையான சின்னம் வழங்கப்பட உள்ளது. சின்னம் வந்த 15 நிமிடத்தில் உலகப் புகழ் பெறும் என்றார்.

### மூடுபனியால் விபரீதம்:

# அரியானாவில் வாகனங்கள் அடுத்தடுத்து மோதி விபத்து

**சண்டிகர், டிச. 15-**

அரியானா மாநிலத்தில் நெடுஞ்சாலைகளில் நிலவிய மூடுபனியால் வாகனங்கள் அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளாகின. இதில் பலர் காயமடைந்தனர்.

அரியானாவில் நேற்று காலை முதல் சாலைகள் தெரியாத அளவுக்கு அடைந்த மூடுபனி சூழந்திருந்தது இந்நிலையில் அங்கு ரோஹ்தக், ஹிசார், ரேவாரி மாவட்டங்களில் நடந்த வெவ்வேறு சாலை விபத்துகளில் பலர் காயமடைந்தனர். ரோஹ்தக் மாவட்டத்தில் மேஹம் பகுதியில் உள்ள நெடுஞ்சாலை சந்திப்பில் முதலில், ஒரு லாரி மற்றும் ஒரு கார் மோதிக்கொண்டன. தொடர்ந்து பின்னால் வந்த வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மோதிக்கொண்டன. சுமார் 35 முதல் 40 வாகனங்கள் விபத்தில் சிக்கின.

இந்த சம்பவத்தில் பல வாகனங்கள் நொறுங்கின. விபத்து குறித்த தகவல் கிடைத்ததும், காவல்துறை மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று காயமடைந்தவர்களை அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். இதேபோல், ஹிசார் மாவட்டத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் அரசுப் பேருந்து ஒரு லாரியுடன் மோதியதில், பின்னால் வந்த மற்றொரு பேருந்து, ஒரு கார் மற்றும் இரு சக்கர வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன.

இந்த விபத்தில் ஒரு இரு சக்கர ஓட்டி காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்ற பயணிகள் காயமின்றி தப்பியதாகத் தெரிகிறது. மேலும், ரேவாரி மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை இல் மற்றொரு விபத்து ஏற்பட்டது. மூன்று முதல் நான்கு பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன. இதனால் பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அருகிலுள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அரியானாவில் கடந்த சில நாட்களாக கடுமையான குளிர் நிலவி வருகிறது. பல மாவட்டங்களில் வெப்பநிலை 4 முதல் 6 டிகிரி செல்சியஸாகக் குறைந்துள்ளது. இந்த சூழலில், இந்திய வானிலை ஆய்வு மையம் அடர்ந்த மூடுபனி உருவாகும் என்றும், வாகன ஓட்டிகள் கவனமாக இருக்க வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது. மூடுபனி விளக்குகளைப் பயன்படுத்தவும், வாகனங்களுக்கு இடையேயான தூரத்தை கடைபிடிக்கவும் அறிவுறுத்தியுள்ளது.

# அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு: 2 பேர் பலி

**ரோட் ஐஸ்லாந்து,டிச. 15-**


அமெரிக்காவின் ரோட் ஐஸ்லாந்து மாகாணத்தில் உள்ள பிரவுன் பல்கலைக்கழகத்தின் சனிக்கிழமை இரவு நடந்த துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 9 பேர் காயமடைந்தனர். துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேக நபர் இன்னும் கைது செய்யப்படவில்லை.

இது தொடர்பாக பிரவுன் பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கையில், 2 உயிரிழப்புகளை உறுதி செய்ததுடன், மேலும் 9 பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழகத்தில் உள்ளவர்கள் இயல்பு நிலை திரும்பும் வரை வெளியில் வர வேண்டாம் என்றும், துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் இன்னும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது. இறந்தவர்கள் மற்றும் மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களை அடையாளம் காணும் பணியில் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர். பல்கலைக்கழகத்தில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து விசாரணைகள் தொடர்வதாகவும், எந்த சந்தேக நபரும் கைது செய்யப்படவில்லை என்றும் மேயர் பிரட் ஸ்மைலி தெரிவித்தார். சந்தேக நபரை கண்டறிய பிரவுன் பல்கலைக்கழக அதிகாரிகள், பிராவிடன்ஸ் நகர காவல் துறை, எஃப்.பி.ஐ ஒருங்கிணைந்து செயல்படுவதாக அவர் கூறினார். இந்த ஆண்டு மட்டும் அமெரிக்காவில் உள்ள கல்வி நிறுவனங்களில் 70-க்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடந்துள்ளன.

### திருவனந்தபுரம் மாநகராட்சியின்

# புதிய மேயருக்கான பரிந்துரை பட்டியலில் ராஜேஷ், ஸ்ரீலேகா





**திருவனந்தபுரம், டிச. 15-**

கேரள மாநில உள்ளாட்சி தேர்தலில் திருவனந்தபுரம் மாநகராட்சியை கைப்பற்றியுள்ளது பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி. இந்நிலையில், திருவனந்தபுரம் மாநகராட்சியின் புதிய மேயர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த தேர்தலில் 26 கிராம பஞ்சாயத்து, 2 நகராட்சி மற்றும் 1 மாநகராட்சியில் என்டிஏ கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. திருவனந்தபுரம் மாநகராட்சியில் மொத்தம் 50 இடங்களில் என்டிஏ கூட்டணி வெற்றி பெற்றது. காங்கிரஸ் தலைமையிலான யு.டி.எப். கூட்டணி 4 மாநகராட்சிகளிலும், எல்.டி.எப். கூட்டணி 1 மாநகராட்சியிலும் வெற்றி பெற்றுள்ளது.

இந்த சூழலில் திருவனந்தபுரம் மாநகராட்சியின் புதிய மேயராக வி.வி.ராஜேஷ் பதவியேற்க வாய்ப்புள்ளதாக பா.ஜ.க. வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது. முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி ஸ்ரீலேகா, துணை மேயராக அறிவிக்கப்பட வாய்ப்புள்ளதாக தகவல்.

பா.ஜ.க. தலைமை புதிய மேயரை அறிவிக்கும் என இருவரும் தெரிவித்துள்ளனர். இந்த வெற்றியை கொண்டாடும் வகையில் விரைவில் திருவனந்தபுரத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி வர உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

திருவனந்தபுரம் மாவட்டத்தின் முன்னாள் பா.ஜ.க. தலைவரான வி.வி.ராஜேஷ், இந்த தேர்தலில் கொடுங்கனூர் வார்டில் வெற்றி பெற்றார். முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரியான ஆர்.ஸ்ரீலேகா, சாஸ்தாமங்கலம் வார்டில் வெற்றி பெற்றார். இவர்களில் வி.வி.ராஜேஷ் மேயராகவும், ஸ்ரீலேகா துணை மேயராகவும் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### காற்று மாசு அதிகரிப்பு எதிரொலி:

# டெல்லியில் லாரி போக்குவரத்து, கட்டுமானப்பணிகளுக்கு தடை

**டெல்லி, டிச. 15-**

டெல்லியில் காற்று மாசு அதிகரிப்பால் நான்காம் கட்ட செயல்திட்டத்தை மாநில அரசு அமல்படுத்தியுள்ளது. அதன்படி டெல்லியில் லாரி போக்குவரத்து, கட்டுமானப் பணிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

டெல்லியின் காற்றின் தரம் நாளுக்குநாள் மோசமடைந்து வரும்நிலையில், நேற்று (டிச. 14) காலையில் காற்றின் தரக் குறியீடு 459 என்ற மோசமான நிலையை எட்டியது. இதனைத் தொடர்ந்து, காற்று மாசைக் கட்டுப்படுத்தும் செயல்திட்டமான நான்காம் கட்டத்தின் படி, மாநிலத்தில் அத்தியாவசியப் பொருள்களை வழங்கும் லாரிகளைத் தவிர, அனைத்து நடுத்தர மற்றும் கனரக வாகனங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மக்கள், பொதுப் போக்குவரத்தை அதிகம் பயன்படுத்தவும், போக்குவரத்து சிக்னல்களில், சிவப்பு விளக்கின் போது வாகனங்களை அணைக்குமாறும் அரசு வலியுறுத்தியுள்ளது.

நகராட்சி மற்றும் தனியார் நிறுவனங்கள் 50 சதவிகித ஊழியர்களுடன் செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இணைய வழியிலான வகுப்புகளை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில நாள்களில் மட்டும் நேரடி வகுப்புகள் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. முன்னதாக, மூன்றாம் கட்ட செயல்திட்டத்தின்போது நெடுஞ்சாலை, சாலைகள், மேம்பாலங்கள் உள்ளிட்ட கட்டுமானப் பணிகளுக்கும், கட்டட இடிப்புப் பணிகளுக்கும் தடை விதிக்கப்பட்டது.

# ராகுலுடன் தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகள் இன்று ஆலோசனை

**சென்னை, டிச. 15-**

தமிழகத்தில் தேர்தல் கூட்டணி தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாட்டை உறுதி செய்ய, தமிழகம் - புதுச்சேரி காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகளுடன் ராகுல் காந்தி டெல்லியில் இன்று ஆலோசனை நடத்துகிறார்.

இதுகுறித்து காங்கிரஸ் மூத்த நிர்வாகிகள் சிலர் கூறியபோது, ‘‘தமிழகத்தில் தி.மு.க.வுடன் கூட்டணி என்று உறுதியான நிலையில், த.வெ.க. தலைவர் விஜய்யை ராகுல்காந்தியின் நெருங்கிய வட்டாரத்தில் உள்ள பிரவீன் சக்கரவர்த்தி நேரில் சந்தித்து பேசியுள்ளார். ‘விஜயை சந்தித்தது கூட்டணி குறித்து பேசுவதற்காக இல்லை’ என்று பிரவீன் சக்கரவர்த்தி தெளிவுப்படுத்தி இருந்தாலும் கூட்டணி குறித்த குழப்பம் தமிழக காங்கிரஸ் கட்சியினர் இடையே நிலவுகிறது. தி.மு.க.வும் சந்தேகப் பார்வையுடனே காங்கிரஸை பார்க்கிறது.

இதுகுறித்த தகவல்கள் தொடர்ந்து தலைமைக்கு தெரிவிக்கப்பட்டும் வந்தது. அதனடிப்படையில், தமிழகம்- புதுச்சேரியை சேர்ந்த காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகளை இன்று டெல்லியில் சந்திக்க ராகுல் காந்தி நேரம் ஒதுக்கியுள்ளார். தமிழகத்தில் இருந்து மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை, மூத்த தலைவர்கள் ப.சிதம்பரம், திருநாவுக்கரசர், அழகிரி, தங்கபாலு உள்ளிட்ட 21 பிரதிநிதிகள், புதுச்சேரியில் இருந்து காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம், முன்னாள் மத்திய அமைச்சர் நாராயணசாமி உள்ளிட்ட 15 பிரதிநிதிகள் ராகுலை சந்தித்து ஆலோசனை நடத்துகின்றனர்’ என்றனர்.

# த.வெ.க. வேட்பாளர்களை தலைவர் விஜய் அறிவிப்பார்

## த.வெ.க. தலைமை கழக்கம் அறிவிப்பு



**சென்னை, டிச. 15-**

வேட்பாளர்களை விஜய் அறிவிப்பார் என த.வெ.க. தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன. பிரச்சாரம், பொதுக்கூட்டம், நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை, கட்சி கட்டமைப்பை வலுப்படுத்துதல், கூட்டணி, வேட்பாளர் தேர்வு, தொகுதி பங்கீடு என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்தி வருகின்றன.

இதனிடையே, விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகமும் தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தி வருகிறது. கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை, தேர்தல் வியூகம் உள்பட பல்வேறு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகிறது. அதேவேளை, சில தொகுதிகளுக்கு த.வெ.க. வேட்பாளர்கள் இன்று அறிமுக செய்யப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியானது. நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு தொகுதியில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் யார்? என்பது குறித்து இன்று அறிவிப்பு வெளியாகும் என தகவல் பரவின. த.வெ.க. வேட்பாளர்களை விஜய் அறிவிப்பார் என்று தமிழக வெற்றிக் கழக தலைமை அறிவித்துள்ளது. இது தொடர்பாக த.வெ.க. வெளியிட்ட அறிவிப்பில், வெற்றி வாகை சூடப்போகும் நமது வேட்பாளர்களை, வெற்றித் தலைவர் மட்டுமே அறிவிப்பார். தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளர் அறிவிப்பு குறித்துப் பரவி வரும் தகவல் உண்மையில்லை. தற்போது நடைபெற்று வருவது தொகுதிவாரியான மற்றும் பூத் வாரியான பொறுப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டங்கள் மட்டுமே. வேட்பாளர் அறிமுகம் குறித்த தகவல், முறைப்படி தலைவர் அவர்களால் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டு அறிவிக்கப்படும். சரியான நேரத்தில் சரியான வேட்பாளர்களைக் களமிறக்குவார் தலைவர். அதுவரை களத்தை தயார்படுத்துவோம். மக்கள் பணியில் கவனம் செலுத்துவோம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பா.ஜ.க. - அ.தி.மு.க.வின் ஊதுகுழலாக இருக்கிறார்:

# அன்புமணி மீது அமைச்சர் விமர்சனம்

**சிதம்பரம், டிச. 15-**

பா.ம.க. தலைவர் அன்புமணி தற்போது அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க.வின் ஊதுகுழலாக உள்ளார் என அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

சிதம்பரம் இளமையாக்கினார் கோயில் தெருவில் உள்ள தனியார் மண்டபத்தில், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் நகர தி.மு.க. சார்பில் என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொண்டு கட்சி நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். தொடர்ந்து அவர் பேசியதாவது:

தமிழகத்தில் 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு கடந்த 27 மாதமாக மகளிர் உரிமை தொகை ரூ. ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது. தொகை வழங்கப்படாது என எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறினார். ஆனால் நாங்கள் அத்தொகையை வழங்கியுள்ளோம்.

தற்போது இந்த மாதம் விடுபட்ட மகளிருக்கு மாதம் ஆயிரம் தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 1 கோடியே 30 லட்சம் பெண்களுக்கு உரிமைத்தொகை வழங்கப்படுகிறது. இது முதல்வர் மு.க.ஸ்டாலினின் சாதனையாகும். இந்த திட்டத்தை பா.ம.க. தலைவர் அன்புமணி குறை கூறிவருகிறார். அவர் தற்போது அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க.வின் ஊதுகுழலாக உள்ளார் என்றார். நிகழ்விற்கு நகர்மன்ற உறுப்பினர்கள் த.ஜேம்ஸ்விஜயராகவன், ஏஆர்சி.மணிகண்டன், அப்புசந்திரசேகர், நகர தி.மு.க. துணை செயலர் பா.பாலசுப்பிரமணியன், ஆர்.இளங்கோ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

# நல்லக்கண்ணு மருத்துவமனையில் அனுமதி

**சென்னை, டிச. 15-**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லக்கண்ணு (100) திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டதையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லக்கண்ணு கடந்த ஆகஸ்ட் மாதம் தவறி விழுந்து காயமடைந்தார். தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவருக்கு சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டதையடுத்து அவர் ராஜீவ் காந்தி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். தொடர் சிகிச்சைக்குப்பின்னர் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதையடுத்து அக்.10-ந்தேதி அவர் வீடு திரும்பினார்.

இதையடுத்து, வயிற்றுப் பகுதியில் அவருக்கு பொருத்தப்பட்டிருந்த உணவுக்குழாயில் அடைப்பு ஏற்பட்டதை தொடர்ந்து மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். இந்த நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லக்கண்ணு (100) திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டதையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு மருத்துவர்கள் தொடர்ந்து சிசிச்சை அளித்து வருகின்றனர்.

# கோவை மத்திய சிறையில் கைதி திடீர் சாவு

**கோவை, டிச. 15-**

கோவை மாவட்டம் காரமடை, பொன்னிபாளையம், சக்தி நகரை சேர்ந்த ஒரு முதியவர் போக்சோ வழக்கில் தண்டனை பெற்று மத்திய சிறையில் அடைக்கப்பட்டு இருந்த நிலையில் அவர் திடீரென உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


கோவை மாவட்டம் காரமடை, பொன்னிபாளையம், சக்தி நகரை சேர்ந்த ரங்கசாமி (வயது 64), போக்சோ வழக்கில் தண்டனை பெற்று மத்திய சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார். கடந்த 2024-ம் ஆண்டு முதல் சிறையில் இருந்து வரும் அவருக்கு மதியம் திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.

வலியால் துடித்த அவரை உடனடியாக சிறை மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அவர் மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி ரங்கசாமி பரிதாபமாக உயிரிழந்தார்.

# விருப்ப மனு பெயரில் பணமோசடி: தேர்தல் ஆணையத்தில் ராமதாஸ் புகார்

**சென்னை, டிச. 15-**

தேர்தல் ஆணையம் மற்றும் தமிழக காவல்துறை தலைமை இயக்குநரிடம் ராமதாஸ் அளித்த புகாரில், ‘‘விருப்ப மனு என்ற பெயரில் அன்புமணி பணமோசடியில் ஈடுபடுகிறார். விருப்ப மனுக்களைப் பெற கட்சி நிறுவனராகிய எனக்கு மட்டும்தான் உரிமையுண்டு. பா.ம.க. பெயரையோ கட்சியையோ பயன்படுத்த அன்புமணிக்கு எந்த உரிமையும் இல்லை’’ என்று குறிப்பிட்டுள்ளார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ம.க. சார்பில் போட்டியிட விரும்புவோரிடமிருந்து விருப்ப மனுக்களை டிச. 14 ஆம் தேதிமுதல் பெறப்படும் என்று பா.ம.க. தலைவர் அன்புமணி அறிவித்த நிலையில், ராமதாஸ் புகார் அளித்துள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னையில் நடைபெற்ற மத்திய முன்னாள் இரயில்வே துறை இணை அமைச்சர் ஏ.கே.மூர்த்தியின் மகன் ஏ.கே.விஜய்மகேஷ் - எம்.நிவேதா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

# த.வெ.க. சார்பில் விருப்பமனு எப்பொழுது வழங்கப்படும்..?

## செங்கோட்டையன் புதிய தகவல்

**ஈரோடு, டிச. 15-**

தமிழக சட்டசபை தேர்தலில் த.வெ.க.வுக்கு போட்டி என யாரையும் சொல்ல முடியாது என தெரிவித்த செங்கோட்டையன், த.வெ.க. சார்பில் விருப்பமனு எப்பொழுது வழங்கப்படும் என்பது குறித்த தகவலையும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபைக்கான தேர்தல் அடுத்த ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதங்களில் நடைபெற உள்ள சூழலில், அரசியல் களம் பரபரப்படைந்து உள்ளது. இந்த தேர்தலில் புதிய கட்சியாக த.வெ.க. களமிறங்கவுள்ளது. த.வெ.க. தலைவர் விஜய், ஆட்சியில் பங்கு என்று அறிவித்து இருக்கிறார். இதனால், ஆட்சியமைக்கும் பட்சத்தில், அமைச்சரவையில் கூட்டணி கட்சிகளுக்கு இடம் கிடைக்கும் என கூறப்படுகிறது.

த.வெ.க.வில் கடந்த சில மாதங்களாக வேட்பாளர் தேர்வு நடைபெற்றது. இந்த சூழலில், சில தொகுதிகளில் கட்சி வேட்பாளர்கள் இன்று முதல் அறிமுகம் செய்யப்பட உள்ளார்கள் என தகவல் வெளியாகி உள்ளது. திருச்செங்கோட்டில் நேற்று வேட்பாளர்கள் அறிமுகம் செய்யப்பட வாய்ப்பிருப்பதாக தகவல் வெளியானது. இதன்படி, அருண்ராஜ் அறிமுகம் செய்யப்பட வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில், ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் த.வெ.க. தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் செய்தியாளர்களை நேற்று சந்தித்து பேசினார். அப்போது அவர் அளித்த பேட்டியில், த.வெ.க.வில் இன்னும் பலர் இணைய உள்ளனர். மக்கள் சக்தி மூலம் விஜய் தமிழகத்தின் முதல்வர் ஆவார் என கூறினார்.

அவர் தொடர்ந்து, சட்டசபை தேர்தலில் த.வெ.க.வுக்கு போட்டி என யாரையும் சொல்ல முடியாது. த.வெ.க.வுக்கு மக்கள் சக்தி இருக்கிறது என்றார். அப்போது தேசிய ஜனநாயக கூட்டணியுடனான (என்.டி.ஏ.) கூட்டணி பேச்சு வார்த்தை உண்டா? என்பது தொடர்பான நிருபர்களின் கேள்விக்கு பதிலளித்த அவர், தேர்தல் களம் என்பது எப்படி செல்லும் என யாராலும் கணிக்க முடியாது என கூறினார்.

அ.தி.மு.க.வுடன் கூட்டணியா? என்ற கேள்விக்கு, அதனை நீங்கள்தான் கூற வேண்டும் என கூறினார். த.வெ.க.வின் விருப்பமனு தேதியை விஜய் அறிவிப்பார் என்றும் செங்கோட்டையன் கூறினார். வேறு கட்சியில் இருந்து யாரேனும் வருவார்களா? என்ற கேள்விக்கு, தி.மு.க.வில் இருந்து 30-க்கும் மேற்பட்டோர் வர இருக்கின்றனர் என கூறினார்.

# ஈரோட்டில் விஜய் மக்கள் பிரச்சார கூட்டத்திற்கு காவல்துறை அனுமதி

**சென்னை, டிச. 15-**

ஈரோட்டில் பெருந்துறை அருகே விஜய் பிரச்சாரம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டமன்றத்தேர்தல் அடுத்த ஆண்டு (2026) நடைபெறவுள்ள நிலையில் த.வெ.க. தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை தீவிரமாக மேற்கொண்டு வந்தார். கரூரில் கடந்த செப்டம்பர் மாதம் 27-ந் தேதி நடந்த பிரசாரத்தில் கூட்டநெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்திற்கு பின்னர் விஜய் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் இருந்தார்.

இருப்பினும் கரூர் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களை மாமல்லபுரத்திற்கு நேரில் வரவழைத்து ஆறுதல் கூறினார். இருப்பினும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்தாமல் இருந்தார். இதனையடுத்து காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள தனியார் என்ஜினீயரிங் கல்லூரி வளாக அரங்கத்தில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை விஜய் நடத்தினார்.

இதற்கிடையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் த.வெ.க.வில் இணைந்தார். அவருக்கு நிர்வாகக்குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் பதவி வழங்கப்பட்டது. கூடுதலாக ஈரோடு, கோவை, திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கு அமைப்பு செயலாளராகவும் நியமிக்கப்படுள்ளார். இந்த நிலையில், த.வெ.க. தலைவர் விஜய் வருகிற 18-ம் தேதி ஈரோடு மாவட்டத்தில் பிரசாரம் செய்ய உள்ளதாக செங்கோட்டையன் தெரிவித்தார்.

பிரசார பயணத்திற்கு அனுமதி கோரி ஈரோடு ஆட்சியர் கந்தசாமி மற்றும் காவல் கண்காணிப்பாளரை நேரில் சந்தித்து த.வெ.க. தலைமை ஒருங்கிணைப்பாளர் கே.ஏ.செங்கோட்டையன் மனு அளித்தார். விஜய் பிரச்சாரத்திற்கு செய்யும் இடம் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமானது என விஜயபுரி அம்மன் கோயில் செயல் அலுவலர் மாவட்ட ஆட்சியர், காவல்துறையில் கடிதம் அளித்திருந்தார். இதனால் விஜய் பிரச்சாரத்திற்கு கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த நிலையில், ஈரோட்டில் பெருந்துறை அருகே விஜய் பிரச்சாரத்திற்கு மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத்துறை இடத்தை பயன்படுத்திக்கொள்ள த.வெ.க. சார்பில் கட்டணம் செலுத்தப்பட்டதால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.த.வெ.க. சார்பில் நிலத்தை பயன்படுத்த டெபாசிட் மற்றும் கட்டணமாக ரூ.1 லட்சம் செலுத்தப்பட்டது.

# தமிழகத்தில் குழந்தை பிறப்பு விகிதம் சரிவு

## 6 ஆண்டுகளில் 18 சதவீதம் வீழ்ச்சி

**சென்னை, டிச. 15-**

தமிழகத்தில் குழந்தை பிறப்பு விகிதத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த 6 ஆண்டுகளில் 18 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்தியாவில் கடந்த 2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 121 கோடியே 8 லட்சத்து 54 ஆயிரத்து 977 பேர் இருந்தனர். ஆனால் தற்போது இந்த எண்ணிக்கை 146 கோடியாக உயர்ந்து இருக்கும் என்று மதிப்பிடப்பட்டு உள்ளது. அதாவது ஆண்டுக்கு 1.5 சதவீதம் என்ற அடிப்படையில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் இருக்கிறது.

உலகின் மக்கள்தொகை அதிகம் இருந்த நாடான சீனாவை, இந்தியா பின்னுக்கு தள்ளிவிட்டது. நாட்டில் இறப்பு விகிதங்கள் ஒரு புறம் இருந்தாலும், அதனை விட பிறப்பு விகிதம் அதிகமாக இருப்பதே மக்கள் தொகை உயர்வுக்கான முக்கிய காரணமாக உள்ளது. ஆனால் தமிழகத்தை பொறுத்தவரை நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. இங்கு பிறப்பு விகிதம் ஆண்டுக்கு, ஆண்டு கடும் சரிவை சந்தித்து வருகிறது. பிறப்பு விகிதங்கள், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. அதன்படி தமிழகத்தில் கடந்த 2019-ம் ஆண்டு 9 லட்சத்து 45 ஆயிரத்து 842 குழந்தைகள் பிறந்து இருக்கிறார்கள். அதாவது தினமும் சராசரியாக 2 ஆயிரத்து 591 குழந்தைகள் பிறந்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு, நேற்று வரை பதிவு செய்யப்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை 7 லட்சத்து 41 ஆயிரத்து 928 ஆக இருக்கிறது. அதன்படி சராசரியாக ஒரு நாளைக்கு 2 ஆயிரத்து 138 குழந்தைகள்தான் பிறந்துள்ளனர். இன்னும் டிசம்பர் மாதம் முடிய 18 நாட்கள் மட்டுமே இருப்பதால் தமிழகத்தில் இந்த ஆண்டு 7 லட்சத்து 80 ஆயிரம் குழந்தைகள் மட்டுமே பிறக்க வாய்ப்பு இருக்கிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை சற்று அதிகரித்தாலும் 8 லட்சத்தை தாண்டுவது சற்று சிரமம்தான் என்று தெரிகிறது.

இந்த எண்ணிக்கையை கடந்த 2019-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதாவது 6 ஆண்டுகளில் குழந்தைகள் பிறப்பு எண்ணிக்கை 18 சதவீதம் அளவுக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் 1.3 முதல் 1.5 சதவீதம் குழந்தைகள் பிறப்பு விகிதம் அதிகரித்து வந்தாலும் தமிழகத்தில் மட்டும் கடந்த 6 ஆண்டு களில் சராசரியாக ஆண்டுக்கு 3.1 சதவீதம் அளவுக்கு பிறப்பு விகிதம் வீழ்ச்சி அடைந்து இருக்கிறது.

கடந்த 2020-ம் ஆண்டு தமிழகத்தில் 9 லட்சத்து 39 ஆயிரத்து 788 குழந்தைகள் பிறந்திருக்கின்றனர். 2021-ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 9 லட்சத்து 12 ஆயிரத்து 875 ஆக குறைந்தது. தொடர்ந்து 2022-ம் ஆண்டில் 9 லட்சத்து 36 ஆயிரத்து 361 குழந்தைகளும், 2023-ம் ஆண்டில் 9 லட்சத்து 2 ஆயிரத்து 329 குழந்தைகளும் பிறந்து இருக்கிறார்கள். ஆனால் மிக குறைவாக தொடர்ந்து 2024-ம் ஆண்டில் 8 லட்சத்து 47 ஆயிரத்து 715 குழந்தைகள் மட்டுமே பிறந்து இருக்கின்றன. கடந்த 2024-ம் ஆண்டுடன், இந்தாண்டு இதுவரை பிறந்த குழந்தைகள் எண்ணிக்கையை ஒப்பிட்டால் சுமார் 67 ஆயிரத்து 715 குழந்தைகள் குறைவாக பிறந்து இருக்கிறது. இது 8 சதவீதம் சரிவு ஆகும். ரிசர்வ் வங்கியும், தமிழகத்தில் குழந்தை பிறப்பு விகிதம் சரிந்து வருவதை தனது ஆய்வறிக்கையில் அதிர்ச்சி தகவலாக சுட்டிக்காட்டி உள்ளது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



பாராளுமன்றத்தில் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். ஆனால், எங்களின் கேள்விகளுக்கு அமித்ஷா பதிலளிக்கவில்லை. மகாராஷ்டிரம், ஹரியாணாவில் அதிகாரத்தில் உள்ளவர்கள், வாக்குகளைத் திருடி ஆட்சிக்கு வந்துள்ளனர். இன்று ஆட்சியில் இருப்பவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

- கார்கே



அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க.வை தவிர வேறு எந்த கட்சியும் இதுவரை கூட்டணியில் சேர முன்வரவில்லை. பா.ம.க. உள்கட்சி மோதலால் பிளவுபட்டிருக்கிறது. அ.தி.மு.க.விலும் பிளவு ஏற்பட்டிருக்கிறது. இதன் பின்னணியில் தமிழகத்தில் 2026 சட்டமன்றத் தேர்தலில் இண்டியா கூட்டணி மீண்டும் உறுதியாக வெற்றி பெறும்.

- செல்வப்பெருந்தகை



தை பிறந்தால் வழி பிறக்கும். தமிழ்நாட்டின் அரசியலுக்கும் நிச்சயம் நல்லதொரு வழி பிறக்கும். தே.மு.தி.க. நிர்வாகிகளுடன் தினமும் பேசி வருகிறோம். தேர்தலுக்கு நாங்கள் ரெடியாக இருக்கிறோம். கூட்டணி குறித்து முடிவு எதுவும் எடுக்கவில்லை.உரிய நேரத்தில் நல்ல தகவலை அறிவிப்போம். 234 தொகுதிகளும் எங்கள் இலக்கு.

- பிரேமலதா



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தை தோல்வியின் சின்னம் என்று பிரதமர் அழைத்தார். இப்போது அந்த புரட்சிகரமான திட்டத்துக்கு பெருமை தேடிக்கொள்ளும் நோக்கில் அதன் பெயரை பிரதமர் மோடி மாற்றுகிறார். இது இந்தியாவின் ஆன்மா குடியிருக்கும் கிராமங்களில் இருந்து மகாத்மா காந்தியை அழிப்பதற்கான மற்றொரு வழி.

- கே.சி.வேணுகோபால்




காஞ்சிபுரம் மாவட்டத்தில் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ விடுபட்டவர்களுக்கு ஏ.டி.எம்., கார்டுடன் 1000 ரூபாய் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு, மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் சுந்தர், எழிலரசன், மாவட்ட வருவாய் அலுவலர் முருகேசன், மேயர் மகாலட்சுமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஆர்த்தி, சப் -கலெக்டர் ஆஷிக் அலி ஆகியோர் உடன் இருந்தனர்.



திருவொற்றியூர் காலடிப்பேட்டை சன்னதி தெருவில் உள்ள கல்யாண வரதராஜ பெருமாள் கோயில் வாசலில் வருகிற 18-ஆம் தேதி நடைபெற உள்ள அகில பாரத ஐயப்ப சேவா சங்கத்தின் 21ஆம்ஆண்டு ஐயப்ப திருவிளக்கு பூஜைக்காக பந்தகால் நடும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் சேவா சங்க நிர்வாகிகள் ஐயப்ப பக்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நலம் காக்கும் ஸ்டாலின்திட்ட முகாமில் கடந்த வாரம் வரை 683 முகாம்கள் நடத்தப்பட்டு 10,58,286 பேர் பயன்பெற்றுள்ளார்கள்.

## மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறன் சான்று 41,324 பேருக்கு கடந்த வாரம் வரை வழங்கப்பட்டுள்ளது

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

**சென்னை,டிச.15**

அமைச்சர்.மா.சுப்பிரமணியன் சென்னை, அம்பத்தூர், சேது பாஸ்கரா தனியார் பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, இம்முகாமில் கலந்து கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்கினார். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது

நலம் காக்கும் ஸ்டாலின் எனும் மகத்தான திட்டம் 02.08.2025 அன்று சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு வாரம் சனிக்கிழமை அன்று தமிழ்நாட்டில் உள்ள 38 வருவாய் மாவட்டங்களிலும் இந்த முகாம் நடைபெறுகிறது. மேலும் இந்த முகாம் கடந்த வாரம் வரை 11.12.2025 அன்று 5 முகாம் என்கின்ற வகையில் இதுவரை 683 முகாம் நடத்தப்பட்டிருக்கிறது. இதில் 10,58,286 பேர் பயனடைந்திருக்கிறார்கள். இந்த திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதும் 1256 முகாம்கள் நடத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், சென்னைக்கு அடுத்து 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 வீதம் 20 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 3 வீதம் 57 முகாம்கள் என்கின்ற அளவிலும், தமிழ்நாட்டில் உள்ள 388 வட்டாரங்களில் தலா 3 என்கின்ற வகையிலும் ஆக ஒட்டு மொத்தம் 1,256 முகாம்கள் நடத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு இதுவரை 683 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. இத்திட்டம் மக்களை பெரிய அளவில் கவர்ந்திருக்கின்றது. இன்று இந்த முகாம் 19வது வாரம் 20வது முறையாக தமிழ்நாடு முழுவதும் 45 இடங்களில் நடைபெற்று ஆக மொத்தம் 728 முகாம்களாக நடைபெற்று வருகிறது. இம்முகாம் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை மட்டும் என்று இருந்ததை ஒவ்வொரு வாரமும் வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் நடத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப இரண்டு நாட்களிலும் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் இம்முகாமில் பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியியல் மற்றும் மகளிர் நல மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மனநல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்திய முறை மருத்துவம் போன்ற 17 வகையான மருத்துவ முறைகள் இந்த முகாம்களில் நடத்தப்படவிருக்கிறது. மேலும் தனியார் மருத்துவமனைகளில் முழு உடற்பரிசோதனைகளுக்கு ரூ.20,000/- வரை செலவாகும். அரசு மருத்துவமனைகளில் கூட ரூ.4,000/- வரை செலவாகும். ஆனால் கட்டணமின்றி இந்த முகாமில் முழு உடற்பரிசோதனைகள் செய்யப்படுகிறது. இன்னொன்று மிக முக்கியமான சேவையாக அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் ஒவ்வொரு முகாமிற்கும் அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு முழு உடற்பரிசோதனை செய்யப்படுகிறது. அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு மிகப் பெரிய சேவை செய்யப்படுவது என்பது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதல்முறை. மேலும் இந்த முகாம்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு சான்றிதழ்கள் தரப்பட்டு வருகிறது. இந்த சான்றிதழ் பெறுவதற்கு மருத்துவர்களின் ஆலோசனை, மருத்துவர்களிடத்தில் அவர்களுக்கு எத்தனை சதவிகிதம் அளவிற்கு பாதிப்பு இருக்கின்றது என்று அறிந்து சான்றிதழ் வழங்குதல், தொடர்ந்து வருவாய் அளவில் சான்றிதழ் பிறகு தான் மாற்றுத்திறனாளி சான்றிதழ் பெற முடியும் என்கின்ற நிலை இருந்தது. எனவே மாற்றுத்திறனாளிகள் பல்வேறு அலுவலகங்களுக்கு சென்றுதான் இச்சான்றிதழ் பெறும் நிலை இருந்தது. அந்தவகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்தந்த பகுதிகளிலேயே நடைபெறுகின்ற முகாம்களில் மாற்றுத்திறனாளிகள் நேரிலையாக வருகை புரிந்து அவர்களுவினை மருத்துவர்களிடம் காண்பித்து அன்றைய நாளிலேயே சான்றிதழ்கள் நிலையினை தந்திருக்கிறார்கள். இதுவரை நடைபெற்றுள்ள 683 முகாம்கள் மூலம் 41,324 மாற்றுத்திறனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.



முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டம் அட்டை வழங்குதல்

மேலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தில் பொறுத்தவரை தமிழ்நாட்டில் 1.47 கோடி குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றனர். இருந்தாலும் புதியதாக குடும்பங்கள் இத்திட்டத்தில் பதிவு செய்தவுடன் அவர்களுக்கும் காப்பீடு அட்டைகள் உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இதுவரை நடைபெற்றுள்ள 683 முகாம்களில் 32,514 குடும்பத்தினருக்கு மருத்துவக் காப்பீடு அட்டை வழங்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியை பொறுத்தவரை 15 முகாம்கள் என்று அறிவிக்கப்பட்டு, கடந்த வாரம் வரை 9 முகாம்கள் நடைபெற்றுள்ளது. இதுவரை 21,438 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். இன்று 10வது முகாம்களாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் இந்த முகாமில் அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கும் முழு உடற்பரிசோதனை என்கின்ற வகையில் அவர்களுக்கும் பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகிறது. மேலும் வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் முழு உடற்பரிசோதனை செய்யப்படுகிறது. இது உலகளவில் எந்த நாட்டிலும், இந்தியாவில் எந்த மாநிலங்களிலும் இல்லாத ஒன்று. அதாவது வெளிமாநில தொழிலாளர்களுக்கு மொழி பாகுபாடு, இன பாகுபாடு, எல்லை பாகுபாடு எதையும் பாராமல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முழு உடற்பரிசோதனை செய்ய அறிவுறுத்தியிருக்கிறார்கள். இன்று காலை 11 மணி நிலவரப்படி தமிழ்நாடு முழுவதும் 23,819 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள்.

11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடர்பான கேள்விக்கு:-கலைஞர் அவர்கள் 2009ஆம் ஆண்டு மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக்கல்லூரி அமைக்க வேண்டும் என்று சொல்லி 11 மருத்துவக் கல்லூரிகள் அப்போது ஆரம்பிக்கப்பட்டது. நிலம் ஆர்ஜிதம் செய்வது, அரசாணைகள் வெளியிட்டது எல்லாம் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில். 10 ஆண்டுகள் அதிமுக ஆட்சிக் காலத்தில் பொறுமையாக பணிகள் செய்து ஆட்சி முடியும் போது தொடங்குவதாக அறிவித்தார்கள். இந்த ஆட்சிப் பொறுப்பேற்றதற்கு பிறகு 3 ஆண்டுகளில் அப்பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இன்னமும் 6 மாவட்டங்களில் மருத்துவக்கல்லூரிகள் வேண்டும் என்பது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் விருப்பமும் கூட. புதிதாக உருவான மாவட்டமான பெரம்பலூர், தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை போன்ற மாவட்டங்களுக்கு மருத்துவக்கல்லூரி வேண்டும் என்று தொடர்ச்சியாக நமது மாண்புமிகு முதலமைச்சர் ஒன்றிய பிரதமர் அவர்களிடமும், ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களிடமும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். கடந்த ஜனவரி மாதம் நானும் துறையின் செயலாளர் அவர்களும் டெல்லிக்கு சென்று ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். கல்லூரிகள் அமைப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அதிமுக ஆட்சிகாலத்தில் 11 கல்லூரிகள் தொடங்கப்பட்டதாக தெரிவிப்பவர்கள் அக்கல்லூரி கட்டிடப் பணிகள் இந்த அரசுப் பொறுப்பேற்ற பிறகுதான் முழு அளவு நிதி ஆதாரம் வழங்கி பயன்பாட்டிற்கு கொண்டு வந்தது என்பது நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் என்றார்

இந்நிகழ்வில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர்ஜோசப் சாமுவேல், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மண்டலக்குழுத்தலைவர்பி.கே.மூர்த்தி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலகர்கள், கலந்து கொண்டனர்.

# சென்னை விருகம்பாக்கத்தில் முதியோர்களுக்கு சைபர் கிரைம் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு

**சென்னை டிச 15-**

சென்னை பெருநகர காவல் மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் சார்பில் விருகம்பாக்கம் அடுக்குமாடி குடியிருப்பில் சைபர் கிரைம் குற்றங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடை பெ ற் றது. செ ன்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில், மத்திய குற்றப்பிரிவு சைபர்கிரைம் துணை ஆணையர் டாக்டர் என்.ஸ்ரீநாதா, மேற்பார்வையில் மத்திய குற்றப்பிரிவு, சைபர் கிரைம் காவல் நிலையம் சார்பில் நேற்று விருகம்பாக்கம், அருணாச்சலம் சாலையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் பொதுமக்களுக்கு சைபர் கிரைம் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் காவல் நிலைய ஆய்வாளர் உஷா ராணி கலந்து கொண்டு டிஜிட்டல் கைது, ஆன்லைன் டிரேடிங் மோசடி, ஆன்லைன் முதலீடு மோசடி, மேட்ரிமோனியல் மோசடி, கிப்ட் மோசடி மற்றும் இதர ஆன்லைன் மோசடிகள் குறித்து தெளிவாக எடுத்து கூறியும், அதிலிருந்து பாதுகாத்து கொள்ளும் கண்ணியமான, பாதுகாப்பான டிஜிட்டல் பழக்கவழக்கங்களை மேம்படுத்தவும் நடைமுறை ஆலோசனைகள் வழங்கி பொதுமக்களுடன் கலந்துரையாடினார். மேலும் முக்கிய சைபர் பாதுகாப்பு நடைமுறைகளை எடுத்துரைக்கும் துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. இதில் குடியிருப்பு நலச்சங்க நிர்வாகிகள் உட்பட சுமார் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்த நிகழ்ச்சி காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே ஒரு ஆரோக்கியமான உரையாடலை ஏற்படுத்தியும், சைபர் குற்றத்தினால் பாதிப்படையாமல் இருக்க அணுக வேண்டிய நடைமுறைகள், தரவுகளை சரிபார்த்து, உரிய விழிப்புணர்வு கையாளுதலுடன் பொதுமக்கள் ஆன்லைனில் விழிப்புடன் இருக்க ஊக்குவித்தது.

சென்னை பெருநகர காவல் சார்பாக பொதுமக்கள் ஆன்லைன் தளங்களில் பணம் செலுத்துவதற்கு முன் சரிபார்க்க வேண்டும் என்றும், ஆர்வத்தை தூண்டி உண்மையற்ற வருமானத்தை வழங்கும் மோசடிகளுக்கு எதிராக எச்சரிக்கையுடன் கவனம் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் சைபர் மோசடிகள் குறித்து 1930 என்ற எண்ணிலோ, www.cybercrime.gov.in என்ற இணைய தளம் மூலமாகவோ அல்லது அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையத்திலோ புகார் அளிக்கலாம் எனவும்அறிவுறுத்தப்பட்டது.

# புதுவண்ணாரப்பேட்டை பகுதியில் அண்ணணின் இருசக்கர வாகனத்தை தீ வைத்த தம்பி கைது

**சென்னை டிச 15-**

சென்னை, புதுவண்ணாரப்பேட்டை, அன்னை சத்தியா நகர் பகுதியில் சேகர், என்பவர் வசித்து வருகிறார். இவர் கடந்த 10 ந் தேதி அன்று இரவு அவரது வீட்டின் ஓரமாக இருசக்கர வாகனத்தை நிறுத்தி வைத்து விட்டு வீட்டிற்கு சென்று தூங்கியுள்ளார். மறுநாள் அதிகாலை சேகர் சத்தம் கேட்டு எழுந்து வந்து பார்த்த போது அவரது இருசக்கர வாகனத்தை யாரோ தீ வைத்து எரித்து சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து சேகர் புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்திற்கு சென்று தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட ராஜ்கமல், புதுவண் ணா ர ப் பே ட் டை, சென்னை என்பவரை கைது செய் த னர். வி சா ர ணை யில் எதிரி ராஜ்கமல் குடிப்பதற்கு அவரது சகோதரர் சேகரிடம் பணம் கேட்டுள்ளார். சேகர் பணம் தர மறுக்கவே ஆத்திரமடைந்த ராஜ்கமல் பழைய துணியில் தீப்பற்ற வைத்து இருசக்கர வாகனத்தை தீ வைத்து சேதப்படுத்தியது தெரியவந்தது. மேலும் விசாரணையில் எதிரி ராஜ்கமல் மீது ஏற்கனவே 13 குற்ற வழக்குகள் உள்ளதும் இவர் புதுவண்ணாரப்பேட்டை சரித்திரப்பதிவேடு குற்றவாளி என்பதும் தெரியவந்ததுவிசாரணைக்குப்பின்னர் கைது செய்யப்பட்ட ராஜ்கமல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்

# திருவான்மியூர் பகுதியில் வீட்டில் பரிகாரம் செய்வதாக கூறி, பணம் மற்றும் தங்க நகைகளை திருடியவர் கைது

**சென்னை டிச 15-**

சென்னை, திருவான்மியூர், மேட்டுத் தெருவில் மஞ்சு, என்பவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவர் கடந்த 10.ந் தேதி அன்று காலை அவரது வீட்டிலிருந்தபோது, கையில் குடுகுடுப்பையுடன் வந்த ஒரு நபர் மஞ்சுவின் வீட்டு கதவை தட்டி மஞ்சு வந்தபோது, உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் பில்லி சூனியம் வைத்துள்ளதாகவும், இதனால் கெடுதல் நடக்க உள்ளதாகவும், இதனை தடுக்க பரிகார பூஜை செய்ய வேண்டும் என்று கூறி, வீட்டிற்குள் நுழைந்து பூஜை பொருட்களை எடுத்து வர சொல்லி, பரிகார பூஜை செய்வதற்கு பணம், பட்டு புடவைகள் மற்றும் அணிந்திருக்கும் தங்க நகைகளை கழட்டி வைக்க வேண்டும் என சொன்னதின் பேரில், மஞ்சு அவர் அணிந்திருந்த சுமார் 4 சவரன் எடை கொண்ட 2 தங்க வளையல்கள் மற்றும் 1 ஜோடி தங்க கம்மல், பணம் ரூ.10ஆயிரம்ஆகியவற்றை பூஜைக்காக வைத்துள்ளார்.

பின்னர் அந்த நபர் தண்ணீர் கொண்டு வருமாறு கூறவே, மஞ்சு தண்ணீர் எடுத்து வருவதற்குள் மேற்படி நபர் பூஜையில் வைத்திருந்த பணம் மற்றும் தங்க நகைகளை திருடிக் கொண்டு தப்பிச்சென்றார்.

இது குறித்து மஞ்சு, திருவான்மியூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்தனர்.

திருவான்மியூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி நூதன திருட்டில் ஈடுபட்ட எதிரி பாலமுருகன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் சுமார் 4 சவரன் எடையுள்ள 2 தங்க வளையல்கள், 1 ஜோடி தங்க கம்மல் மற்றும் செலவு செய்தது போக பணம் ரூ.2,ஆயிரம் மீட்கப்பட்டு, 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி பாலமுருகன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# கோட்டூர்புரம் பகுதியில் அரசு அலுவலகத்தின் பூட்டை உடைத்து லேப்டாப்கள் திருடிய மூவர் கைது

**சென்னை டிச 15-**

சென்னை, கோட்டூர்புரம், சர்தார் பட்டேல் சாலையிலுள்ள சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் (நெடுஞ்சாலைத்துறை), கோட்டம்-3 அலுவலகத்தை 6.ந் தேதி அன்று பூட்டிவிட்டு, 8.ந் தேதி அன்று காலை அலுவலகத்தை திறக்க வந்தபோது, பூட்டு உடைக்கப்பட்டு, அலுவலகத்தில் வைத்திருந்த அரசால் வழங்கப்பட்ட 6 லேப்டாப்கள் திருடு போயிருந்ததாக இவ்வலுவலகத்தின் கண்காணிப்பாளர் சிவராஜ் என்பவர் கோட்டூர்புரம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். கோட்டூர்புரம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி அரசு அலுவலகத்தின் பூட்டை உடைத்து லேப்டாப்கள் திருடிய 1.ஆகாஷ், 2.ஹேமநாதன், 3.கோகுல கிருஷ்ணன், ஆகிய 3 மூவரை கைது செய்தனர்.

விசாரணையில் எதிரிகள் மூவரும் கோட்டூர்புரம் பகுதியில், அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கட்டுமான பணிக்காக வைத்திருந்த பொருட்கள், சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் உள்ள யுபிஎஸ் பேட்டரி மற்றும் சின்னமலை பகுதியில் வைத்திருந்த சென்டிரிங் பொருட்களை திருடிய 3 வழக்குகளில் தொடர்புடையவர்கள் என தெரியவந்தது. அதன்பேரில், எதிரிகளிடமிருந்து 5 லேப்டாப்கள், திருடிய பொருட்களை விற்ற பணம் ரூ.50,ஆயிரம் மீட்கப்பட்டது.

மேலும் விசாரணையில் எதிரி ஆகாஷ் மீது ஏற்கனவே ஒரு திருட்டு வழக்கு உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட 3 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# பெரியமேடு பகுதியில் வட மாநில வாலிபரிடம் செல்போனை பறித்தவர் கைது

**சென்னை டிச 15-**

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த முக்தார் ஆலம், என்பவர், அவரது ஊரிலிருந்து இரயில் மூலம் நேற்று முன் தினம் காலை, சென்னை சென்டிரல் இரயில் நிலையம் வந்திறங்கி, புழல் செல்வதற்காக பார்க் பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்தபோது, அருகில் வந்த ஒரு நபர் திடீரென முக்தார் ஆலம் பாக்கெட்டில் வைத்திருந்த விவோ செல்போனை திருடிக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டார். இது குறித்து முக்தார் ஆலம் பெரியமேடு காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்தனர்.பெரியமேடு காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி செல்போன் பறிப்பில் ஈடுபட்ட எதிரி ஆனந்த், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் விவோ செல்போன் உட்பட 3 செல்போன்கள் மீட்கப்பட்டது. விசாரணையில் எதிரி ஆனந்த் மீது ஏற்கனவே 1 போதைப்பொருள் வழக்கு உட்பட 2 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி பாலமுருகன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# கொளத்தூர் பகுதியில் பெண்ணை மிரட்டி பணம் பறித்த கணவன்-மனைவி கைது

**சென்னை டிச 15-**

சென்னை, கொளத்தூரைச் சேர்ந்த 26 வயது பெண் ஒருவர் சேத்துப்பட்டில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தபோது, அங்கு நிறுவன அதிகாரிக்கு கார் ஓட்டுநராக வேலை செய்து வந்த ஆனந்த் (எ) விஜய் என்பவர் நட்பாக பேசியதாகவும், பின்னர் திருமணம் ஆகவில்லை என ஆசை வார்த்தைகள் கூறி பலமுறை அழைத்துச் சென்று உறவு கொண்டதாகவும், பின்னர் அவர் திருமணமாகி 2 பிள்ளைகள் உள்ளது தெரியவந்ததின்பேரில், அவரிடம் பேசுவதை நிறுத்திவிட்டு, மேற்படி நிறுவனத்தில் வேலைக்கு செல்லாமல் நின்றுவிட்டதாகவும், கடந்த அக் மாதம் 26.ந் தேதி அன்று அப்பெண் கொளத்தூரில் உள்ள அவரது வீட்டிலிருந்தபோது, மேற்படி ஆனந்த் (எ) விஜய் அவரது மனைவி நந்தினி என்பவருடன் அப்பெண்ணின் வீட்டிற்கு சென்று மேற்படி பெண்ணின் சகோதரியிடம், இருவரது உறவு பற்றி கூறி பணம் கேட்டதாகவும், பணம் தரவில்லை எனில் அனைவரிடம் உனது சகோதரி குறித்து தெரியபடுத்துவதாக மிரட்டியதன் பேரில், மேற்படி பெண்ணின் சகோதரி இருவரிடமும் ரூ.10, ஆயிரம் ஜிபே மூலம் அனுப்பியதாகவும், அதன் பின்ர ஆனந்த் மற்றும் அவரது மனைவி அடிக்கடி வந்து பணம் கேட்டால் கொடுக்க வேண்டும் என்றும், கூப்பிடும்போது வர வேண்டும என மிரட்டிச் சென்றதாகவும், இதனால் மேற்படி பெண் தற்கொலைக்கு முயன்றதாகவும், பாதிக்கப்பட்ட பெண் கொளத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண் வன்கொடுமை தடுப்புச்சட்டம் ஆகிய சட்டப்பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் தொடர்புடைய ஆனந்த் (எ) விஜய், இவரது மனைவி நந்தினி, ஆகிய இருவரை கைது செய்தனர். .

மழைநீர் உயிர்நீர்

# அண்ணா சாலையில் பேருந்து கண்ணாடி உடைப்பு: ஒருவர் கைது

**சென்னை டிச 15-**

திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பெருமாள், என்பவர் சென்னை மாநகர அரசு பேருந்து ஓட்டுநராராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 10.ந் தேதி அன்று காலை தடம் எண் 23 சி பேருந்தை அயனாவரத்திலிருந்து பெசன்ட்நகர் நோக்கி ஓட்டிக் கொண்டு, அண்ணா சாலை, சத்யம் திரையரங்கம் அருகே செல்லும்போது, அங்கு கூட்டமாக இருந்த இளைஞர்களில் 3 நபர்கள் பேருந்தை நிறுத்தி பேருந்தில் இருந்த நபர்களை தகாத வார்த்தைகளால் பேசி, கீழே இருந்த கல்லை எடுத்து பேருந்தின் மீது வீசி பேருந்து கண்ணாடிகளை உடைத்து விட்டு தப்பிச் சென்றதாகவும், பேருந்து ஓட்டுநர் பெருமாள் என்பவர் கொடுத்த புகார் மீது அண்ணா சாலை காவல் நிலையத்தில், வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். அண்ணா சாலை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி பேருந்தின் கண்ணாடியை உடைத்த ஆன்றோ, என்பவரை கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட ஆன்றோ கல்லூரி மாணவர் என்பதும், இரு கல்லூரி மாணவர்களுக்கு இடையே உள்ள பகை காரணமாக ஆன்றோ அவரது நண்பர்களுடன் சேர்ந்து சம்பவத்தன்று பேருந்தில் இருந்த மற்றொரு கல்லூரி மாணவர்களை தாக்குவதற்காக கல்லை வீசி பேருந்து கண்ணாடிகளை உடைத்ததும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட ஆன்றோ விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரிகளை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

# மெரினா கடற்கரைப் பகுதியில் நெரிசலைக் குறைக்க புதிய பார்க்கிங் பகுதி

**சென்னை டிச 15-**

சென்னை மெரினா கடற்கரைப் பகுதியில் வாகன நிறுத்தம் பகுதியில் ஏற்படும் நெரிசலைக் குறைக்க, புதிய பார்க்கிங் பகுதி அமைகிறது. அண்ணா சதுக்கத்தின் பின்பக்கம் இந்த பார்க்கிங் அமைக்கப்படுகிறது. இந்த புதிய பார்க்கிங்கால் மெரினாவுக்கு வருபவர்களுக்கு வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு வசதியாக உள்ளது. இது பொதுமக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது



ராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் சந்திரகலா ஆற்காடு நகராட்சி அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த விண்ணப்ப படிவங்களில் விடுபட்டவர்கள், இறந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் குறித்த முரண்பாடுகளை களைந்து செயலியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை ஆய்வு செய்தார்.உடன் வட்டாட்சியர் மகாலட்சுமி உள்ளார்.



வேலூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமை தொகை இரண்டாம் கட்ட விரிவாக்க விழாவில் அமைச்சர் துரைமுருகன் பெண்களுக்கு உரிமை தொகைக்கான வங்கி பற்று அட்டையை வழங்கினார். இதில் கலெக்டர் வே.இரா.சுப்புலட்சுமி, கதிர் ஆனந்த் எம்பி, எம்எல்ஏக்கள் நந்தகுமார், அமுலு விஜயன், மாவட்ட வருவாய் அலுவலர் சிவ சுப்பிரமணியன், துணை மேயர் சுனில்குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா, ஒன்றிய குழு தலைவர்கள் வேல் முருகன், சத்யானந்தம், ரவிச்சந்திரன், நகர்மன்ற தலைவர் பிரேமா கலந்து கொண்டனர்.



தமிழக வெற்றி கழகம் ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் நகர செயலாளராக நியமனமாகிவுள்ள பழனிபேட்டையை சேர்ந்த ரமேஷ் கட்சி ஆதரவாளர்களுடன் அம்பேத்கர் அண்ணா, காமராஜ் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



அரக்கோணம் டவுன்ஹாலில் அரக்கோணம் சட்டமன்ற தொகுதிபாஜக சார்பில் வாக்காளர் பட்டியல் திருத்த குறித்த கூட்டம் நடைபெற்றது. சட்டமன்ற தொகுதி அமைப்பாளர் சி.விஜயன் தலைமைவகித்தார். இணை அமைப்பாளர் சரத்குமார் மற்றும் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் முரளி நரசிம்மன் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராகமாநில நிர்வாகிகள் பாபாஸ் பாபு பால்கனகராஜ், குணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டத்தில் குடோனில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல்நிலை சரிப்பார்ப்பு பணிகளை தேர்தல் பார்வையாளர் ராகவேந்திரா, கலெக்டர் சிவ சவுந்திரவல்லி ஆய்வு செய்தனர். இதில் மாவட்ட வழங்கல் அலுவலர் முருகேசன், தேர்தல் வட்டாசியர் திருமலை கலந்து கொண்டனர்.

# ராணிப்பேட்டை மாவட்டத்தில் தேர்தல் பட்டியல் முரண்பாடுகளை களையும் பணிகள்: கலெக்டர் சந்திரகலா நேரில் ஆய்வு

ராணிப்பேட்டை.,டிச.15 மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா வாக்காளர் பட்டியில் சிறப்புத் தீவிர திருத்தம் 2026 பணியில் முரண்பாடுகளை களையும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு பணிகள் விரைவாக முடிக்க கேட்டுக் கொண்டார்கள்

ராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா (14.12.2025) இராணிப்பேட்டை, வாலாஜா, ஆற்காடு நகராட்சி அலுவலகங்களில் வாக்காளர் சிறப்புத் தீவிர திருத்தம் தொடர்பான Logical discrepancies பதிவுகள் BLO செயலியில் பதிவிடுவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேற்படி பணி



யினை சரியான முறையில் Mapping செய்து விரைந்து முடிக்குமாறு அறிவுரை வழங்கினார். இப்பணிகளின் போது உள்ள பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து முழு கவனத்துடன் தவறில்லாமல் பணிகளை மேற்கொள்ள கேட்டுக் கொண்டார்கள்.நந்த ஆய்வின்பொழுது வட்டாட்சியர்கள்.ஆனந்தன், மகாலட்சுமி கலந்து கொண்டனர்.

# திருவாரூர் பள்ளி மாணவர்கள் மாநில அளவிலான ஹாக்கி போட்டிக்கு தேர்வு



திருவாரூர்,டிச.15-

திருவாரூர் வ.சோ . அரசு உதவி பெறும்ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் ஆறுமுகம் என்ற மாணவனும் 11ஆம் வகுப்பு படிக்கும் தட்சிணாமூர்த்தி என்ற மாணவரும் ஆக்கி விளையாட்டில் சிறந்த வீரர்களாக திகழ்ந்து மாநில அளவிலான தமிழ்நாடு அணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.இவர்கள் நம் மாநிலத்தின் சார்பாக தேசிய அளவில் நடக்கும் போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளனர். இம் மாணவர்களையும் இவர்களுக்கு பயிற்சி அளித்த விளையாட்டு துறை ஆசிரியர்களையும், பள்ளிச் செயலர் பாலசுப்ரமணியம், பள்ளி தலைமை ஆசிரியர் தியாகராஜன், உதவி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அலுவலர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் பாராட்டி வாழ்த்து கூறினர்.

# கந்தர்வகோட்டையில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் பொதுக்கூட்டம் திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்பு



புதுக்கோட்டை,டிச.15-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றிய திமுக இணைந்து தமிழக துணை முதலமைச்சர் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் கந்தர்வகோட்டை வெள்ள முணிஸ்வரர் கோவில் திடலில் நடைபெற்றது கூட்டத்திற்கு வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே கே செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு முன்னதாக அனைவரையும் கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மங்களா கோவில் பரமசிவம் வரவேற்றார் கூட்டத்தில் தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்.சிவ. வி .மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் இந்த பொதுக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக திமுக கொள்கை பரப்பு செயலாளரும் தமிழக பாடநூல் வாரிய தலைவர் திண்டுக்கல் ஐ லியோனி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திமுக இலக்கிய அணி மாநில செயலாளர் கவிச்சுடர் கவிதை பித்தன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இளைய மன்னர் வி. ஆர். கார்த்திக் தொண்டைமான் கந்தர்வகோட்டை வழக்கு ஒன்றிய கழக செயலாளர் கோமாபுரம் தமிழ் அய்யா நகரக் கழகச் செயலாளர் ராஜா மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தவசிமணி மாவட்ட மீனவர் அணி துணைச் செயலாளர் ஜானகி ராமன் ஒன்றிய கவுன்சிலர் நியூஸ் ராஜேந்திரன் ஒன்றிய பொருளாளர் நெப்புகை சரவணன் மாவட்ட தொண்டர் அணி செயலாளர் எம் எம் முருகேசன் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பிரகாஷ் மஞ்சம்பட்டி ஆனந்த் ரமேஷ் சுரேஷ் தெற்கு ஒன்றிய விவசாய அணி செயலாளர் முருகேசன் நாயக்கர் பட்டி அம்பிகாபதி மற்றும் திமுக கிளை கழக பொறுப்பாளர்கள் மகளிர் அணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர் இறுதியில் இளைஞரணி செயலாளர் கலையரசன் நன்றி கூறினார்

# மலம்பட்டியில் பொதுமக்களுக்கு ஓம்நமச்சிவாயா அறக்கட்டளை சார்பில் நலத்திட்ட உதவிகள்



பொன்னமராவதி,டிச.15-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் ஓம் நமச்சிவாய என்ற அறக்கட்டளை இயங்கி வருகிறது.சிங்கப்பூரில் உள்ள நண்பர்கள் மூலம் நிதியுதவி பெறப்பட்டு பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.அந்த வகையில் திருமயம் அருகே கோட்டூர் மலம்பட்டியில் நலிவடைந்த நிலையில் உள்ள குடும்பங்களுக்கு 37 வகையான மளிகை பொருட்கள் அடங்கிய இரண்டு மாதத்திற்கு தேவையான மளிகை சாமான்கள் ஓம்நமச்சிவாய அறக்கட்டளை சார்பில் நிர்வாகிகள் வழங்கினர். இந்நிகழ்வில் ஓம்நமசிவாய அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் கோட்டூர் பாண்டியன், ஓம்நமச்சிவாயா அறக்கட்டளை நிர்வாகி ஆசிரியர் கருப்பையா,மலம்பட்டி ராசு,ராமச்சந்திரன்,வேலுச்சாமி பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# அரக்கோணம் லஞ்சம கொடாதோர் இயக்க ஆலோசனை கூட்டம்



அரக்கோணம் டிச15

ராணிபேட்டை மாவட்டம் அரக்கோணம் நகரம் பழனி பார்வதி பார்ட்டி ஹாலில் ,லஞ்சம கொடாதோர் இயக்கம்..நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்தஆலோசனை கூட்டத்திற்கு மாநில பொது செயலாளர் விஜயரங்கம் தலைமை வகித்தார்.மாநில கொள்கை பரப்பு செயலாளலர் மனோகரன். முன்னிலை வகித்தார். இந்த ஆலோசனை கூட்டத்தின் போது பல்வேறு முக்கிய முடிவுகளும் தீர்மானங்களும் நிறைவேற்றபட்டன. அவற்றில் மக்களிடம் இருந்து பல்வேறு குறைகள் இயக்கத்தின் கவனத்திற்கு வந்தால் அதன் மீது விரைவாக நடவடிக்கை எடுப்பது புதிய உறுப்பினர்கள் சேர்க்கை அதிகம் சோ ப்பது உள்ளிட்டமுக்கிய தீர்மானங்கள் பல நிறைவேற்றபட்டது கூட்டத்தில்மாநில துணை பொது செயளாலர் மகராஜன் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் பலர் பேசினர் மாவட்ட தலைவர், ராஜேந்திரன். மாவட்ட பொருளாலர், புருஷோத்தமன். மாவட்ட அமைப்பு செயளாலர், சுந்தரவடிவேலு, மாவட்ட கொள்கை பரப்பு செயளாலர் விஜயமாணிக்கம். மற்றும் மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் பலரும் திரளாக கூட்டத்தில் கலந்துக் கொண்டனர். கூட்டத்தின் முடிவில் மாவட்ட தலைவர் ராஜேந்திரன் நன்றி கூறினார்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# திருச்சியில் மதிமுக சார்பில் ஜனவரி மாதம் நடைபெறும் நடைபயணத்தில் திரளானோர் பங்கேற்க தீர்மானம்

அரியலூர்,டிச.15-

அரியலூர் மதிமுக அலுவலகத்தில் அக்கட்சியின் மாவட்ட செயற்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட அவைத்தலைவர் சகாதேவன் தலைமை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினர் தங்கவேல், மாவட்ட பொருளாளர் புகழேந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக பொருளாளர் மு.செந்திலதிபன், அரியலூர் எம்எல்ஏ கு.சின்னப்பா ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்டச் செயலாளர் ராமநாதன், நகரச் செயலாளர் மனோகரன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் உட்பட கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில், போதைப் பொருட்களிலிருந்து இளைஞர்களை காக்கவும், ஜாதி,மத மோதல்களை தடுத்திடவும் வலியுறுத்தி திருச்சியில் ஜன.2 அன்று தொடங்கி மதுரையில் ஜன.12 அன்று நிறைவடையும் சமத்துவ நடை பயணத்தில் பொதுச் செயலாளர் வைகோவுடன் திரளானோர்



பங்கேற்பது.2026 சட்டப்பேரவை தேர்தல் நிதி, கழக வளர்ச்சி நிதி வசூல் செய்து மாவட்ட கழகத்தின் சார்பில் கட்சி தலைமைக்கு வழங்குவது. 2026 சட்டப்பேரவை தேர்தலில் திமுகவுடன் கூட்டணியுடன் நீடிப்பது. நமது இயக்கம் அங்கீகாரம் பெறும் அளவுக்கு தொகுதிகளை கேட்டு பெறுவது. சட்டப்பேரவை தேர்தலில் திமுக தலைமையிலான மதசார்பற்ற கூட்டணி மாபெரும் வெற்றி பெற பணி செய்வது. தொடர் மழையின் காரணமாக விவசாயிகளின் மக்காச்சோளப் பயிர்கள் சேதம் அடைந்துள்ளதை அரசு கணக்கெடுத்து உரிய நிவாரணம் வழங்க வலியுறுத்துவது. விவசாயிகளுக்கு தட்டுப் பா டின்றி உரம் வழங்க வலி யு றுத் து வது. அரியலூர் பேருந்து நிலையத்தை விரைவில் திறக்க நட வ டிக்கை மே ற்கொள்ள வலி யு றுத் து வது என்பன உள்ளிட்ட தீர் மா னங் கள் நிறைவேற்றப் பட்டன.

# பெரம்பலூர் அருகே எழுமூர் ஊராட்சியில் திமுக சார்பில் ஆலோசனைக்கூட்டம்



பெரம்பலூர்,டிச.15-

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் வேப்பூர் தெற்கு ஒன்றியதிற்கு உட்பட்ட எழுமூர் ஊராட்சியில் பூத் எண் 84, 85:ல் திமுக சார்பில் என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி- தமிழ்நாடு தலைகுணியாது ஆலோசனை கூட்டம் வேப்பூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் மருவத்தூர் ராஜேந்திரன் தலைமையில் நடைப்பெற்றது. இதில் மாவட்ட கழக துணைச் செயலாளர் சன். சம்பத் முன்னிலை வகித்தார் இதில் ஒன்றிய அவைத்தலைவர் கந்தசாமி, கழக துணை செயலாளர் உமா சந்தோஷ்குமார், ஒன்றிய பொருளாளர் எஸ்.பி கண்ணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் தினேஷ்,மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கல்யாண சுந்தரம்,மற்றும் கிளை கழக நிர்வாகிகள் தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

Government of Tamil Nadu
TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY

No.EO/E-TENDER/CW/2025/CBE/DECEMBER/2025
e-TENDER NOTICE

For and on behalf of the Chancellor, Tamil Nadu Agricultural University, Coimbatore e-tenders are invited online. All the details are available in the website **https://tntenders.gov.in** from **16.12.2025 at 11.00 AM** onwards. Further particulars may be obtained at the office of the Estate Officer i/c., TNAU, Coimbatore on all working days during office hours.

| Sl. No | Name of work | Civil work value (Excluding GST) |
|---|---|---|
| 1 | Construction of 64 rooms & 4 toilet blocks in first floor & second floor in girls hostel building (Phase – V) at TNAU, Coimbatore | Rs.4,34,07,281/- |


DIPR/6606/Tender/2025 ESTATE OFFICER i/c.,

## 2025-ம் ஆண்டின்

# சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் விருதை வெல்வாரா விராட்கோலி?

**துபாய், டிச. 15-**

2025-ம் ஆண்டின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் விருதை இந்திய நட்சத்திர வீரர் கோலி வெல்வாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.



**ஆண்டுதோறும்...**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஆண்டுதோறும் சிறந்த டெஸ்ட், ஒரு நாள், டி20 அணிகள் மற்றும் சிறந்த வீரர், வீராங்கனைகளை தேர்வு செய்து கவுரவித்து வருகிறது. ஆண்டு முழுவதும் வீரர், வீராங்கனைகள் சிறப்பாக செயல்பட்ட விதத்தை கணக்கில் கொண்டு இந்த கவுரவத்துக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**10 வீரர்களின்...**

அந்த வகையில், 2025-ம் ஆண்டிற்கான சிறந்த ஒரு நாள் கிரிக்கெட் வீரர் விருதுக்கு 10 வீரர்களின் பெயர்களை ஐ.சி.சி. பரிந்துரைத்துள்ளது. அந்த வகையில் இதில் இடம்பெற்றுள்ள 10 வீரர்களின் விவரம் குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதில் இந்திய நட்சத்திர வீரரான விராட் கோலியின் பெயர் இடம்பெற்றுள்ளது. இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரே இந்திய வீரர் விராட் கோலி என்பது குறிப்பிடத்தக்கது. இதில் அதிகபட்சமாக 3 நியூசிலாந்து வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

### பரிந்துரை பட்டியல் விவரம்:

1. விராட் கோலி (இந்தியா).
2. மேத்யூ பிரீட்ஸ்கே (தென் ஆப்பிரிக்கா).
3. ஜோ ரூட் (இங்கிலாந்து).
4. ஷாய் ஹோப் (வெஸ்ட் இண்டீஸ்).
5. டேரில் மிச்செல் (நியூசிலாந்து).
6. மேட் ஹென்றி (நியூசிலாந்து).
7. அடில் ரஷீத் (இங்கிலாந்து).
8. ஜேடன் சீல்ஸ் (வெஸ்ட் இண்டீஸ்).
9. சிக்கந்தர் ராசா (ஜிம்பாப்வே).
10. மிட்சல் சாண்ட்னர் (நியூசிலாந்து).

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

## ஜெய்ஸ்வால், சர்பராஸ் கான் அபாரம்:

# அரியானாவை வீழ்த்தியது மும்பை

**புனே, டிச. 15-**

சையத் முஷ்டாக் அலி கோப்பை தொடரில் ஜெய்ஸ்வால், சர்பராஸ் கான் அபார ஆட்டத்தால் அரியானாவை வீழ்த்தி மும்பை வெற்றி பெற்றது.



**புனேயில் தொடக்கம்....**

18-வது சையத் முஷ்டாக் அலி கோப்பைக்கான 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தொடரின் சூப்பர் லீக் சுற்று புனேயில் தொடங்கியது. சூப்பர் லீக்குக்கு தகுதி பெற்று இருக்கும் 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் ஜார்கண்ட், மத்தியபிரதேசம், ஆந்திரா, பஞ்சாப்பும், 'பி' பிரிவில் மும்பை, அரியானா, ராஜஸ்தான், ஐதராபாத்தும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும், தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். இதன் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பிடிக்கும் அணி இறுதிப்போட்டிக்குள் நுழையும்.

**பந்துவீச்சு தேர்வு...**

இதில் 'பி' பிரிவில் இன்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் மும்பை - அரியானா அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற மும்பை அணியின் கேப்டன் ஷர்துல் தாகூர் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த அரியானா அணி அதிரடியாக ஆடி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 234 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக அங்கித் குமார் 89 ரன்களும், நிஷாந்த் சந்து 63 ரன்களும் அடித்தனர். மும்பை தரப்பில் சாய்ராஜ் படில் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**17.3 ஓவர்களில்...**

இதனையடுத்து 235 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய மும்பை அணிக்கு தொடக்க ஆட்டக்காரர் ஆன ஜெய்ஸ்வால் சிறப்பாக ஆடி சதமடித்தார். 50 பந்துகளில் 101 ரன்கள் அடித்த நிலையில் அவர் கேட்ச் ஆனார். அவருக்கு அடுத்து வந்த வீரர்களில் அதிரடியில் மிரட்டிய சர்பராஸ் கான் வெறும் 25 பந்துகளில் 64 ரன்கள் அடித்து மும்பை அணியின் வெற்றியை உறுதி செய்தார். வெறும் 17.3 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 238 ரன்கள் அடித்த மும்பை 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## பிரபல டபுள்யூ.டபுள்யூ.இ. வீரர்

# விடைபெற்றார் ஜான் சீனா

**நியூயார்க், டிச. 15-**

பிரபல டபுள்யூ.டபுள்யூ.இ. மல்யுத்த வீரரும் நடிகருமான ஜான் சீனா, தன்னுடைய கடைசி போட்டியில் தோல்வியடைந்த நிலையில் ஓய்வு பெற்றார்.



**தனி ரசிகர் பட்டாளம்....**

90-ஸ் கிட்ஸ்களின் மறக்க முடியாத நினைவுகளில் டபுள்யூ.டபுள்யூ.இ. நிகழ்ச்சிக்கு எப்போதும் தனி இடம் உண்டு. இந்த சண்டைப் போட்டியில் பல 'சூப்பர் ஸ்டார்கள்' வருகை தந்து, வென்று காட்டி, விடைபெற்றுள்ளனர். இதில் ஜான் சீனாவுக்கு என தனி ரசிகர் பட்டாளம் உண்டு. அதற்கு காரணம் அவருடைய தனித்துவமான சண்டைப் பாணி. அதன் மூலம் உலக அளவில் ரசிகர்களை அவர் கவர்ந்தார். ரிங்குங்கள் சண்டைக்காக அவர் என்ட்ரி கொடுக்கும் அந்த தருணத்தில் ஒலிக்கும் பின்னணி இசை பலரது போனில் ரிங்டோனாக ஒலித்தது உண்டு.

**கடைசி போட்டியில்...**

கடந்த 2002-ம் ஆண்டு டபுள்யூ.டபுள்யூ.இ.-ல் அறிமுகமான ஜான் சீனா, டபுள்யூ.டபுள்யூ.இ. ஜாம்பவான்களான தி ராக், ட்ரிபிள் ஹெச், ரேண்டி ஆர்ட்டன், தி அண்டர்டேக்கர்உள்ளிட்டொருடன் மோதியுள்ளார். 14 முறை டபுள்யூ.டபுள்யூ.இ. சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார். இந்நிலையில், தனது கடைசி போட்டியில் அவர் தோல்வியுடன் விடைபெற்றார். மல்யுத்தம் தவிர 'தி சூசைட் ஸ்குவாட்', 'ஃப்ரீலான்ஸ் உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களிலும், டிசி காமிக்ஸின் பிரபலமான 'பீஸ்மேக்கர்' வெப் தொடரில் பிரதான கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார்.

# திருமண நாளை கொண்டாடிய ரோகித்



**இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் ரோகித் சர்மா 2015 ஆண்டு டிசம்பர் 13 ஆம் தேதி ரித்திகாவை திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு 2018 ஆண்டு சமைரா என்ற பெண் குழந்தையும் 2024 இல் ஆஹான் என்ற ஆண் குழந்தையும் பிறந்தது.**

**ரோகித் சர்மா - ரித்திகா தம்பதி தங்களது 10ம் ஆண்டு திருமண நாளை நேற்று முன்தினம் கொண்டாடினர். இந்நிலையில், தங்களது திருமண நாளை இருவரும் கேக் வெட்டி கொண்டாடியுள்ளனர். இது தொடர்பான புகைப்படத்தை ரோகித் தனது இன்ஸ்டா ஸ்டோரியில் பகிர்ந்துள்ளார்.**

## ஆஸ்திரேலியாவில் பயங்கரவாத தாக்குதல்:

# பிரதமர் மோடி கடும் கண்டனம்

**புதுடெல்லி, டிச. 15-**

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள போண்டி கடற்கரையில் நேற்று மாலை மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்தது. இதற்கு பிரதமர் மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் உள்ள சிட்னி நகரின் போண்டி கடற்கரையில் நேற்று மாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 14 பேர் கொல்லப்பட்டனர். இதில் இரண்டு போலீஸ் அதிகாரிகள், பெண்கள், குழந்தைகள் உள்பட பலர் காயமடைந்தனர். இந்த தாக்குதல் பல மாதங்களாக திட்டமிடப்பட்டதாகவும், குழந்தைகள் விளையாட்டு மைதானத்திற்கு அருகிலுள்ள போண்டி கடற்கரை பூங்காவில் நடைபெற்ற யூத மதப் பண்டிகையான ஹனுக்கா நிகழ்வை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் போலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டார். மற்றொருவர் துப்பாக்கியால் சுடப்பட்டு போலீஸ் காவலில் சிகிச்சை பெற்று வருகிறார். பாலத்தின் கீழ் ஒரு வெடிகுண்டு இருப்பதாக தகவல் வந்ததைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருகிறது. இரண்டு நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தும் வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற இந்த கொடூர தாக்குதலுக்கு பிரதமர் மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது: "ஆஸ்திரேலியாவின் போண்டி கடற்கரையில் நடைபெற்ற கொடூரமான பயங்கரவாத தாக்குதலை கண்டிக்கிறோம். இந்திய மக்களின் சார்பாக, தங்கள் நேசத்துக்குரியவர்களை இழந்தவர்களுக்கு எனது இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த துயரமான தருணத்தில் ஆஸ்திரேலிய மக்களுக்கு ஆதரவாக நிற்கிறோம்'' என்று பதிவிட்டுள்ளார்.

# அமித்ஷா இன்று தமிழகம் வருகை

**வேலூர், டிச. 15-**

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இன்று தமிழகம் வருகிறார். வேலூரில் கட்சி நிர்வாகிகளுடன் அவர் முக்கிய ஆலோசனையில் ஈடுபடுகிறார்.

சட்டப்பேரவை தேர்தலையொட்டி அனைத்துக் கட்சிகளும் கூட்டணி பேச்சுவார்த்தையில் தீவிரம் காட்டி வருகின்றன. அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியை பொறுத்தவரை, அவ்விரு கட்சிகள்மட்டுமே கூட்டணியில் இருக்கும் நிலையில், மேலும் பல கட்சிகளை இணைத்து கூட்டணியை பலப்படுத்த பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

குறிப்பாக, ஓ.பி.எஸ்., டி.டி.வி.தினகரனை கூட்டணியில் இணைக்க பா.ஜ.க. முயற்சித்து வருகிறது. இதற்காக, அண்ணாமலை டெல்லியில் முகாமிட்டு, பா.ஜ.க. தேசிய தலைவர்களுடன் ஆலோசித்து வருகிறார். மேலும், இது தொடர்பாக ஓ.பி.எஸ்.ஸூம் டெல்லியில் அமித்ஷாவுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பழனிசாமி தலைமை தாங்குவதால், கூட்டணி குறித்து பழனிசாமிதான் முடிவெடுப்பார் என 10-ம் தேதி நடந்த அ.தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதைத்தொடர்ந்து, நேற்று முன் சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி வீட்டுக்குச் சென்ற பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், பழனிசாமியை சந்தித்துப் பேசினார்.


சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த சந்திப்பில், கூட்டணி விவகாரம், தொகுதி பங்கீடு குறித்து ஆலோசித்ததாக தெரிகிறது. மேலும், தமிழகத்தில் பா.ஜ.க. போட்டியிட விரும்பும் தொகுதிகள் குறித்து பழனிசாமியிடம் நயினார் நாகேந்திரன் ஆலோசித்ததாகவும் தெரிகிறது. இந்நிலையில், நயினார் நாகேந்திரன் டெல்லி சென்றார். நேற்று டெல்லியில் மத்திய அமைச்சர் அமித்ஷாவை சந்தித்த அவர், கூட்டணி விரிவாக்கம், தேர்தல் தொடர்பான பணிகள், தொகுதி பங்கீடு, ஓ.பி.எஸ்., டி.டி.வி.தினகரன் விவகாரம் உள்ளிட்டவை குறித்து அவருடன் ஆலோசித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் இன்று அமித்ஷா தமிழகம் வருகிறார். டெல்லியில் இருந்து விமானம் மூலம் பெங்களூரு வரும் அவர், அங்கிருந்து, ஹெலிகாப்டர் மூலம் வேலூர் வருகிறார். வேலூரில் பா.ஜ.க. மூத்த நிர்வாகிகளுடன், கட்சி அமைப்பு ரீதியான ஆலோசனையில் அமித்ஷா ஈடுபடுகிறார். தொடர்ந்து கூட்டணி கட்சி தலைவர்களையும் சந்திக்கிறார். அப்போது, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமியையும் சந்திக்க இருப்பதாக கூறப்படுகிறது. நாளை (டிச.16-ம் தேதி) ராணிப்பேட்டையில் நயினார் நாகேந்திரனின் யாத்திரை நடைபெற உள்ள நிலையில், இன்று அமித்ஷா வேலூரில் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி, கூட்டணி குறித்த அறிவிப்பை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மெஸ்ஸி-ராகுல் காந்தி சந்திப்பு

**ஐதராபாத், டிச. 15-**

ஐதராபாத்தில் கால்பந்து ஜாம்பவான் மெஸ்ஸியை காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி சனிக்கிழமை சந்தித்தார்.



ஐதராபாத்தில் கால்பந்து ஜாம்பவான் மெஸ்ஸியை ராகுல் காந்தி சனிக்கிழமை சந்தித்து பேசினார். அப்போது தன்னுடைய கையொப்பமிட்ட ஜெர்சியை ராகுலுக்கு அவர் பரிசளித்தார். தொடர்ந்து இருவரும் அங்கு கலந்துரையாடினர். தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ராகுல் காந்தி வருவதற்கு முன்பு, மெஸ்ஸியுடன் முதல்வர் ரேவந்த் ரெட்டி ராஜீவ் காந்தி சர்வதேச (ஆர்ஜிஐ) கிரிக்கெட் விளையாட்டுத் திடலில் சில நிமிடங்கள் செலவிட்டார். அவர் ஜெர்சி அணிந்து மெஸ்ஸியுடன் கால்பந்து விளையாடினார். முன்னதாக, இன்று(டிச. 13) காலை கொல்கத்தாவில் நடைபெற்ற ரசிகர்களைச் சந்திக்கும் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு, மாலையில் ஐதராபாத் நகரைச் சென்றடைந்த கால்பந்தாட்ட ஜாம்பவான் மெஸ்ஸிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# வெற்றி ரகசியம்: திலக் வர்மா

தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடரை தென் ஆப்பிரிக்காவும், ஒருநாள் தொடரை இந்தியாவும் வென்றன. 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் 2 போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் முதல் போட்டியில் இந்தியாவும், இரண்டாவது போட்டியில் தென் அப்பிரிக்காவும் வென்றுள்ளன. மூன்றாவது போட்டி நேற்று தரம்சாலாவில் நடைபெற்றது.

இந்த சூழலில் செய்தியாளர் சந்திப்பில் திலக் வர்மா, "அணியில் உள்ள எல்லோரும் பேட்டிங் ஆர்டரில் எந்த இடத்திலும் விளையாட தயாராக உள்ளோம். அணி நிர்வாகத்தின் விருப்பத்துக்கு ஏற்ப மூன்று, நான்கு அல்லது ஐந்தாம் இடத்தில் விளையாட நான் தயாராக உள்ளேன். மனதளவில் திடமாக இருந்தால் எந்த இடத்திலும் பேட் செய்ய களம் கண்டு சிறப்பாக விளையாட முடியும். கடந்த 2024 உலகக் கோப்பை தொடரில் டாப் ஆர்டரில் அக்சர் படேல் தனது ரோலை சிறப்பாக செய்திருந்தார். சில நாட்களில் நமது திட்டங்கள் நடைபெறாமல் போகலாம்'' என்றார்

# என்ஜின் இல்லாத காராக அ.தி.மு.க. உள்ளது: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தாக்கு

**திருவண்ணாமலை, டிச. 15-**

என்ஜின் இல்லாத காரை எவ்வளவு தள்ளினாலும் பலன் இல்லை. என்ஜின் இல்லாத காராக அ.தி.மு.க. உள்ளது என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.




2026 சட்டமன்ற பொதுத் தேர்தலைச் சந்திக்க தி.மு.க. முழு வீச்சில் தயாராகி வருகிறது. தி.மு.க. தலைவர் மற்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வாக்குச் சாவடியையும் வெற்றி வாக்குச் சாவடியாக மாற்றிக் காட்ட வேண்டும் என்று கட்சி நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். அதன் அடிப்படையில் தேர்தல் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், இளைஞர் அணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின், கடந்த பாராளுமன்றத் தேர்தலை ஒட்டி சேலத்தில் இளைஞர் அணி மாநாடு நடத்தியது போல, தற்போது சட்டமன்றத் தேர்தலுக்காக இளைஞர் அணி வடக்கு மண்டல மாநாட்டை திருவண்ணாமலையில் நேற்று நடத்தினார். இதில் 91 தொகுதிகளைச் சேர்ந்த 1.5 லட்சம் இளைஞர் அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: "தமிழகத்தை காக்க உருவாக்கப்பட்ட இயக்கம் தி.மு.க. பீகார், உத்தரப் பிரதேசத்தில் நீங்கள் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டில் அது நடக்காது. பாஜக மதம் பிடித்த யானை என நினைக்கலாம். அந்த யானையை அடக்கும் அங்குசம் நம் தலைவரிடம் உள்ளது. நீங்கள் எவ்வளவு சீண்டினாலும், தி.மு.க. இளைஞர் அணி களத்தில் தயாராக இருக்கும். கட்டுப்பாடு இல்லாத கூட்டத்தை வைத்தும் ஒன்றும் செய்ய இயலாது. 2026-ல் தி.மு.க. வெற்றி பெறுவது உறுதி. 'தமிழ்நாடு என்றைக்குமே டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல் தான்' என்று கூறியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின். குஜராத்தில் உட்கார்ந்து கொண்டு மிரட்டலாம் என்று நினைத்தால், அது கனவில் கூட நடக்காது.

சென்னையில் நடந்த அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் 'எடப்பாடியை முதல்வர் ஆக்குவோம்' என்று தீர்மானம் போட்டார்கள். என்ஜின் இல்லாத காரை எவ்வளவு தள்ளினாலும் பலன் இல்லை. என்ஜின் இல்லாத காராக அ.தி.மு.க. உள்ளது. அந்த என்ஜின் இல்லாத காரை பா.ஜ.க. என்ற லாரி எப்படியாவது இழுத்துச் செல்லலாம் என்று நினைக்கிறது. அ.தி.மு.க.வில் இருந்து ஒவ்வொருவராக வெளியே போகிறார்கள். ஆனால் 'நான் மட்டுமே பொதுச் செயலாளர்; யார் வேண்டுமானாலும் போங்கள், யார் வேண்டுமானாலும் வாருங்கள்' என்று எடப்பாடி பழனிசாமி கூறி வருகிறார்.

அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமான வரித் துறை உள்ளிட்டவற்றை வைத்து அச்சுறுத்தப் பார்க்கிறார்கள். பாசிச சக்திகளையும், அதற்கு அடிமையாக இருப்பவர்களையும் விரட்டியடிப்போம். இது கணக்குக் காட்டும் கூட்டம் இல்லை. ஒரு கோடி இளைஞர்கள் கூடினாலும் பிரச்சினை இல்லை; உங்கள் கணக்கை சுக்குநூறாக உடைக்கும் கூட்டம். வானவில் நிறங்கள் கலராக இருக்கும்; ஆனால் அது நிரந்தரம் கிடையாது. ஆனால் உதய சூரியன் மட்டுமே நிரந்தரம் என்றார்.

# தி.மு.க.வின் எதிர்காலம் மிக பிரகாசமாக உள்ளது

## அமைச்சர் துரைமுருகன் பேச்சு

**திருவண்ணாமலை, டிச. 15-**

2026 சட்டமன்ற பொதுத் தேர்தலைச் சந்திக்க தி.மு.க. முழு வீச்சில் தயாராகி வருகிறது. தி.மு.க. தலைவர் மற்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வாக்குச் சாவடியையும் வெற்றி வாக்குச் சாவடியாக மாற்றிக் காட்ட வேண்டும் என்று கட்சி நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். அதன் அடிப்படையில் தேர்தல் பணிகள் நடைப்பெற்று வருகின்றன. இந்த நிலையில், இளைஞர் அணி செயலாளரும் துணை முதல் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கடந்த பாராளுமன்றத் தேர்தலை ஒட்டி சேலத்தில் இளைஞர் அணி மாநாடு நடத்தியது போல, தற்போது சட்டமன்றத் தேர்தலுக்காக இளைஞர் அணி வடக்கு மண்டல மாநாட்டை திருவண்ணாமலையில் இன்று நடத்தினார். இதில் 91 தொகுதிகளைச் சேர்ந்த 1.5 லட்சம் இளைஞர் அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: சிறிய அளவில் நண்பர்களோடு அமர்ந்து ஆரம்பிக்கப்பட்டது தி.மு.க. இளைஞரணி. இப்போது பரந்து விரிந்து ஆலமரமாக மாறியிருக்கிறது. பேசுவதை விட இந்த கூட்டத்தை பார்த்துக் கொண்டே இருக்கலாம் என நினைக்க தோன்றுகிறது. அண்ணாவின் புகழ் வரிசையில் கருணாநிதி இருந்தார். கருணாநிதியை மிஞ்சும் புகழ் வரிசையில் மு.க.ஸ்டாலின் இருக்கிறார். மு.க.ஸ்டாலினுக்கு அடுத்து யார் என்ற கேள்விக்கு பதில் உதயநிதி. தி.மு.க.வின் எதிர்காலம் பிரகாசமாக உள்ளது. வலுவான தலைமை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# கவர்னரின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாதது ஏன்?

## அமைச்சர் கோவி.செழியன் விளக்கம்

**கும்பகோணம், டிச. 15-**

கவர்னர் கலந்துகொள்ளும் பட்டமளிப்பு விழாக்களில் நாங்கள் கலந்து கொள்ளாதது ஏன் என்பது குறித்து தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் விளக்கமளித்துள்ளார்.

திருவிடைமருதூர் பேரூராட்சியில் ரூ.1.05 கோடி மதிப்பிலான 6 கட்டிடங்களை உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் திறந்து வைத்தார். தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம் திருவிடைமருதூர் பேரூராட்சியில் அரசு சார்பில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களுக்கான திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் பேரூராட்சி தலைவர் புனிதா மயில்வாகணன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் சுந்தர ஜெயபால் வரவேற்றார். முன்னாள் எம்பி செ.ராமலிங்கம் முன்னிலை வகித்தார்.

இதில் கலந்துகொண்ட உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் சமுதாயக் கூடம், பேரூராட்சி அலுவலகத்தில் கட்டப்பட்ட கூட்ட அரங்கம், சமுதாய கூடம், அங்கன்வாடி மையம் என ரூ.1.05 கோடி மதிப்பிலான 6 கட்டிடங்களை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் கூறியதாவது: 2026-ம் ஆண்டுத் தேர்தலில் தி.மு.க. ஆட்சி அமைத்து மீண்டும் முதல்வராக ஸ்டாலின் வருவார் என்ற நம்பிக்கையோடு மக்கள் காத்திருக்கிறார்கள்; அந்தப் பயணம் தொடரும்.

மத்திய அரசு ஏற்படுத்திய இடர்பாடுகள் மற்றும் பொருளாதாரத்தை அடி பாதாளத்திற்குத் தள்ளிய 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சி ஆகிய சூழல்களுக்கு இடையேதான் தி.மு.க. அரசு பொறுப்பேற்றது. பொறுப்பேற்ற பிறகு, எந்த மாநில முதல்வரும் செய்யாத வகையில், முதல்வர் ஸ்டாலின் தனது முதல் பட்ஜெட்டை அறிவிக்கும் முன்பே பொருளாதாரம் குறித்த வெள்ளை அறிக்கையை தாக்கல் செய்தார்.

இந்நிலையில், முதல்வரின் தன்முனைப்பு மற்றும் அக்கறையால், இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தனிமனித வருமான வளர்ச்சியில் 16.5 சதவீதம் என இரட்டை இலக்கை எட்டித் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது. பொருளாதார நெருக்கடியிலும், பொருளாதார வளர்ச்சியை உருவாக்கிய முதல்வரின் செயலை இந்தியாவே உற்று நோக்குகிறது. தமிழக அரசு பொருளாதாரத்தில் சிறந்து விளங்குவதாக மத்திய அரசே பாராட்டிய பிறகு, வேறு யாருடைய பாராட்டும் நமக்குத் தேவைப்படப் போவதில்லை.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில், அந்தந்த மாநில வளர்ச்சிக்கு கவர்னர்கள் துணை நிற்பார்கள்; சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைச் செயல்படுத்த அக்கறை காட்டுவார்கள், மத்திய அரசோடு பேசித் திட்டங்களைக் கொண்டுவர முயற்சிப்பார்கள்.

ஆனால், தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, ஆர்.எஸ்.எஸ். கவர்னராக மாறிவிட்டார். திராவிட மாடல் அரசு எதைச் செய்தாலும் அதற்கு முட்டுக்கட்டை போடுவது, காலம் தாழ்த்துவது, இந்த அரசால் எந்தப் பயனும் இல்லை எனத் திரித்துப் பேசுவது, தமிழைக் கொச்சைப் படுத்திச் சமஸ்கிருதத்தைத் தூக்கிப்பிடிப்பது போன்ற காரியங்களைச் செய்வதால்தான், கவர்னரின் செயல்பாடுகளைத் தமிழக மக்கள் வெறுக்கிறார்கள்.

எந்த வகையிலும் தமிழகத்துக்குப் பயன்படாத கவர்னர் தேவையில்லை என்ற நிலை விரைவில் வரும். இதனால் தான் எங்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் விதமாக, கவர்னர் கலந்துகொள்ளும் பட்டமளிப்பு விழாக்களில் நாங்கள் கலந்து கொள்வதில்லை. அவர் மத்திய அரசு மற்றும் ஆர்.எஸ்.எஸ். பிரதிநிதியாகச் செயல்படுவதைத் தான் தமிழக அரசு கண்டிக்கிறது. இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் கூறினார்.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 15.12.2025 முதல் 21.12.2025 வரை )**

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து தன வரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுப காரிய பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகள் தயவால் பயன் பெறுவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும்.. வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

பரணி --

இந்த வாரம் சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். புண்ணியத் திருத்தலம் யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் தன வரவு அதிகரிக்கும். மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். பூஜா வழிபாடுகளால் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் பெறுவதற்கான வழிமுறைகள் கையாண்டு வெற்றி அடைவீர்கள். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிவார்கள். சிலரின் உடல் நலிவுறும். பெண்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீண் அலைச்சல்கள், வெட்டிச் செலவுகளும் தவிர்க்க முடியாததாகும். மதிப்பு மிக்க மனிதர்களின் நட்பால் அரசுப் பணியாளர்களின் ஆசைகள் நிறைவேறும். பெண்கள் தங்கள் செலவைக் குறைத்து சேமிப்பை உயர்த்த முற்பட வேண்டும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் குழந்தைகளின் சீரான முன்னேற்றம் மனதில் மகிழ்ச்சியை தோற்றுவிக்கும். உயர் ரக ஆடை ஆபரணங்கள் மற்றும் விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும். பக்தியில் அதிக நாட்டம் ஏற்படும். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும். இரவு பயணங்களின் போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. மக்கள் சேவையில் ஈடுபட்டதன் காரணமாக மக்களால் பாராட்டப்படுவீர்கள். வியாபாரிகள் புதிய வியாபார நுணுக்கங்களை புகுத்தி ஆதாயம் காண்பர்.

ரோகிணி –

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் வீட்டில் அமைதி நிலவும். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். சகோதரிடம் கருத்து வேறுபாடு ஏற்படும். எதிர்பார்த்த இனங்களில் இருந்து தன வருமானம் தாராளமாக இருக்கும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் தாமதப்படலாம். பெற்றோரின் உடல் நிலையில் அக்கறை எடுத்தல் அவசியம்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். ஆக்கபூர்வமான ஆலோசனை அளித்து அன்பு நண்பர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உதவுவர். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசிரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். தெய்வப் பிரார்த்தனையால், தாமதமான திருமணங்களும் தடபுடலாக நடக்கும். அரசுவகையில் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தாமதமின்றி க் கிடைக்கும். வேலை தேடுபவர்களுக்கு, அவர்களின் திறமைக்கேற்ப நல்ல பணி கிடைக்கும். புதிய பதவிகள் கிடைத்து, அதற்கேற்ப அந்தஸ்தும் உயரும். தொழில் புரிபவர்களுக்கு அரசு மற்றும் வங்கி மூலம் உதவிகள் கிடைத்து நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். அரசுப் பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும். அரசுப் பணிபுரியும் பெண்கள் விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர்.

திருவாதிரை —

இந்த வாரம் தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மனமகிழ்ச்சி ஏற்படும். தாயின் அன்பும் அரவணைப்பும் மகிழ்ச்சி தரும். உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். இலாபம் அதிகம் பெற புதிய விற்பனை யுக்திகளை கையாளுவீர்கள். சிலரின் கற்பனை வளம் பெருகி, கதை, கவிதை எனத் திறம்பட எழுதிப் புகழ் பெறுவர். பொறாமை காரணமாக நண்பர்களே பகைவராக ஆவர்.. சுறுசுறுப்பற்ற நிலையில் காரியத் தடைகள் ஏற்படும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், லாபகரமாகவும் அமையும். உங்கள் செயல்திறன் கூடும். பலவழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் செல்வ நிலையும் உயரும். அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய தனி வீடு அமையும். சீரான பொருளாதார நிலையில், மனதிற்குப் பிடித்த படி மனை, வண்டி வாகனம் என அனைத்தும் கிடைக்கும். குழந்தைகளின் தேர்ச்சி மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும். பிற்கால நலன்கருதி சேமிப்புக்கள், பங்குச் சந்தை ஆகியவற்றில் முதலீடு செய்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு உயர் அதிகாரிகள் ஆதரவால் பணியில் முன்னேற்றங்கள் ஏற்படும். சிலருக்குப் புது வாகன யோகம் ஏற்படும். கூட்டாளிகளின் நியாயமற்ற நடவடிக்கைகள் உங்கள் மனதில் குழப்பத்தை தரும். விவசாயிகளுக்கு அரசின் உதவிகள் எதிர்பார்த்தபடி எளிதில் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்குத் திருமண காலம் கூடிவரும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். எந்த ஒரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் கருத்துடன் படித்துப் பெற்றோர்களுக்கு பெருமை சேர்க்க வேண்டும். அரசுப் பணிக்கான தேர்வுகளில் வெற்றி பெற்று, புதிய பதவிக்கான பணி உத்தரவை பெறுவர். பணிபுரியும் பெண்களுக்கு அதிகாரிகள் கெடுபிடி காரணமாக மன உளைச்சல் ஏற்பட்டு வேறு இடத்திற்கு அல்லது பணிக்கு மாற முற்படுவர். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வரும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம்.

பூசம் –

இந்த வாரம் கையில் பணமும் மனதில் மகிழ்ச்சியும் பொங்கி வழியும். எதையும் சாதிக்கும் திறன், நினைத்ததை நினைத்தபடியே முடிக்கும் முனைப்பும் உங்களுக்கு வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தைத் தரும். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரணையால், குழப்பங்கள் நீங்கி குதூகலம் உருவாகும். செல்வாக்கு மிக்க நபர்கள் உதவியால் உங்கள் பொருளாதார நிலைகள் உயர்ந்து வலுப்படும். நல்ல நண்பர்கள் அமைவர். மதிப்பும் மரியாதையும் கூடும். பணியில் உள்ளவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டால், பதவி உயர்வுகள் தேடி வரும். சிறு தொழில் புரிபவர்களுக்கு தேவையான வங்கிக் கடன் உதவிகள் கிடைக்கும். தொழில் சிறக்கும்.

ஆயில்யம் –

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். எடுக்கும் முயற்சிகளில் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். ஓய்வெடுத்து, உல்லாசமாய் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லை அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. எனவே, கஷ்டங்கள் வந்தாலும் கலங்காதீர்கள். கேளிக்கை மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். எடுத்துக் கொண்ட புதிய திட்டங்களில் எதிர்பாராத தாமதங்கள் தடைகள் ஏற்படலாம். உழைப்பு அதிகமாகி அதற்கேற்பப் போதுமான ஊதியம் இருக்காது.

பூரம் –

இந்த வாரம் மனதுக்கு மிகவும் பிடித்தமான பழைய உறவுகளின் வரவு இதயக் கோட்டையில், தென்றல் போல் வீசும். மணமேடை ஏறும் மங்கல நாளும் வந்து, மனதில் மகிழ்ச்சி மலர்கள் பூக்கும். சிலர் வீட்டில் அள்ளி அணைத்திடவே பிள்ளைச் செல்வம், துள்ளி விளையாடும். அரசு அதிகாரிகளால் சிலருக்குத் இடையூறுகள் ஏற்படலாம். ஆனால், அரசியல் பெரும் புள்ளிகளின் ஆதரவால், பதவியுயர்வு கள் சுலபமாக கிடைக்கும். சிலருக்குக் குழந்தைகள் தொல்லையும், அவர்கள் மூலம் அவமானங்கள் ஏற்படலாம். தந்தைவழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலைகள் மாறி வேகம் பிறக்கும். அதன் காரணமாக இலாபமும் அதிகரிக்கும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் நேர்மையும் கடின உழைப்பும் மட்டுமே வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். உயர் அதிகாரிகளின் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். சிலருக்கு இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும். எனவே துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள். வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். தனவரவு அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும் மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் சிலருக்கு வீண் அலைச்சல்கள் ஏற்படும். அரசுப் பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்றுவட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும். புதிய வியாபார யுக்திகள் அதிக இலாபம் அடைவீர்கள். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும்.

அஸ்தம் –

இந்த வாரம் வாக்கு வன்மை ஓங்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் சுபகாரிய செலவுகள் ஏற்படும். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். சினத்தை அடக்கி உடன் பிறப்புகளுடன் ஒத்துச் செல்வது நல்லது. புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமான வருவாய் பெருக்கம் ஏற்படும். புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அரசுப் பணியாளர்களுக்கு அதிகாரிகள் நட்பால் ஆதாயம் ஏற்படும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும்விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் சுப காரியங்களுக்கு வீடே விழாக்கோலம் காணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். இசை ஆர்வத்தால் சங்கீத சபாக்களுக்கு சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தான தருமங்கள் செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் பணியில் இட மாற்றங்கள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும்.

சுவாதி –

இந்த வாரம் சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புது புது முயற்சியில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும். விரும்பிய பொருட்களை எல்லாம் வீட்டில் வாங்கிக் குவிப்பீர்கள். வியாபாரப் பயணங்கள் மூலம் வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்து விடுவார்கள். உறவு மற்றும் நண்பர்கள் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமான ஆதாயம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த சுபகாரிய செய்திகள் வரும். செலவுகளும் அதிகரிக்கும். மேடைப் பேச்சாளர்கள் புகழ் பெறுவர். திட்டமிட்டுச் செலவு செய்தால், வரவுக்கு மிஞ்சிய செலவுகள் குறையும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும். தொலைதூர செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். உங்கள் உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். புத்திர பாக்கியம் ஏற்படும். விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். உங்களுக்குத் திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும்.

அனுஷம் –

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புத்திர பாக்கியம் ஏற்பட்டு அதன் காரணமாக இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை ஏற்படும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் மூலம் நன்மைகள் ஏற்படும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகள் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். சில நேரங்களில் சுறுசுறுப்பான நிலை நிலவும்.

கேட்டை –

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கை ஈடுபாட்டால் செலவுகள் அதிகரிக்கும். உறவுகளிடம் இருந்து சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். மாணவர்கள் தங்கள் கிரகிப்புத் தன்மையால் தங்கள் கல்வியின் தரத்தை உயர்த்திக் கொள்வர். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். தங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். தொழில் இலாபம் ஆகிய சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள்.

பூராடம் –

இந்த வாரம் புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்தித் திறன் குறையும் வாய்ப்பு ஏற்படலாம். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உண்டு மகிழ்வார்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப்பெரிய சாகசங்களை புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்த நபர்களுக்கு அனுகூலமான பதில்கள் வரும்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணிய ஸ்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் அதிகாரிகள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர்.

திருவோணம்-

இந்த வாரம் பல வகையான உயர்தர வாகன வசதிகள் அமையும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். புதுத்தெம்பு மற்றும், உற்சாகமும் கூடும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். உடன் பிறப்புக்களின் மூலம் நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். புத்தி தெளிவு ஏற்படும். அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். அந்தஸ்து உயரும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். ஆடம்பரச் செலவுகளை குறைக்க பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும் அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படி அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும்..

சதயம்-

இந்த வாரம் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் லாபங்கள் அதிகரிக்கும். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது. வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் பொருளாதார நிலையும் சீராகும். நண்பர்களும் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இருக்காது. தொலைதூர செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெண்களின் அறிவுத்திறன் கூடும். வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

உத்திரட்டாதி-

இந்த வாரம் நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும்.மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதன் மூலம் வருவாய் பெருக்கமும் ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அபராதம் கட்ட நேரும். சிலருக்குத் தோல் உபாதைகள் ஏற்படலாம். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவது உறுதி.

ரேவதி-

இந்த வாரம் மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள்.



முதல்வர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் உலக அளவில் தமிழ்நாடு சிறப்பான இடத்தைப் பெற ஆர்வத்துடன் உழைத்தமைக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் சாம்பியன் ஆப் தி எர்த் விருதை பெற்றுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் முருகானந்தம் உள்ளார்.

### வருகிற 20, 21-ம் தேதிகளில் 2 நாட்கள்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நெல்லை சுற்றுப்பயணம்

## பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைக்கிறார்

**நெல்லை, டிச. 15-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகிற 20, 21-ம் தேதி ஆகிய 2 நாட்கள் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இதனையொட்டி ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. 21-ம் தேதி நெல்லை ரெட்டியார்பட்டி மலைப்பகுதியில் ரூ.56.50 கோடியில் கட்டப்பபடட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைக்கிறார்.

வருகிற 20-ந்தேதி பிற்பகலில் சென்னையில் இருந்து விமானம் மூலம் தூத்துக்குடிக்கு வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், அங்கிருந்து கார் மூலம் நெல்லைக்கு வருகிறார். தொடர்ந்து பாளையங்கோட்டை பெருமாள்புரத்தில் மாலை 5 மணிக்கு தென்னிந்திய திருச்சபை நெல்லை திருமண்டலத்தின் சாராள் டக்கர் கன்வென்ஷன் சென்டர் பிரதான நுழைவு வாயிலை திறந்து வைக்கிறார். பின்னர் அங்கிருந்து டக்கரம்மாள்புரம் தரிசன பூமிக்கு புறப்பட்டு செல்லும் முதல்வர் , அங்கு கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம் நடத்தும் மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில் பங்கேற்கிறார். அங்கு விழா முடிந்ததும் வண்ணார்பேட்டை அரசு விருந்தினர் மாளிகையில் இரவு ஓய்வெடுக்கிறார்.

தொடர்ந்து மறுநாள் (21-ம் தேதி) காலை 9.30 மணிக்கு நெல்லை ரெட்டியார்பட்டி மலைப்பகுதியில் ரூ.56.50 கோடியில் கட்டப்படட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைக்கிறார். அதனை தொடர்ந்து நெல்லை அரசு பல்நோக்கு மருத்துவமனை வளாகத்தில் நடைபெறும் அரசு விழாவில் முதல்வர் கலந்து கொள்கிறார்.

அங்கு சுமார் 50 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசும் அவர், ரூ.110 கோடியில் அமைக்கப்படும் காயிதே மில்லத் நூலகத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார். தொடர்ந்து பல்நோக்கு மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய மேம்படுத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கத்தை திறந்து வைக்கிறார். மேலும் 16 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, பல்வேறு புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார். பின்னர் அங்கிருந்து கார் மூலம் மதுரை சென்று விமானம் மூலம் சென்னை சென்றடைகிறார்.

இந்த விழாவில் கனிமொழி எம்.பி., மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர்கள் துரைமுருகன், தங்கம் தென்னரசு, எ.வ.வேலு, சாத்தூர் ராமச்சந்திரன், கீதாஜீவன், அனிதா ராதா கிருஷ்ணன், மனோ தங்கராஜ் உள்பட பலர் பங்கேற்க உள்ளனர்.

முதல்வர் வருகையை முன்னிட்டு அவர் பங்கேற்கும் அரசு விழாவிற்காக பல்நோக்கு மருத்துவமனை வளாகத்தில் மேடை அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. தற்போது மழைநீர் ஒழுகாத வகையில் மேற்கூரையுடன் கூடிய பந்தல் கிரேன் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது. சுமார் 25 ஆயிரம் பேர் அமரும் வகையில் இந்த பந்தல் அமைக்கப்படுகிறது. இதில் தற்காலிக கழிப்பறை வசதியும் ஏற்படுத்தப்படுகிறது.

முதல்வர் வருகையையொட்டி நெல்லை மாவட்ட தி.மு.க. வினர் உற்சாகம் அடைந்துள்ளனர். பல்நோக்கு மருத்துவமனை செல்லும் சாலையில் சுவர் விளம்பரங்கள் வரையும் பணியில் கட்சியினர் தீவிரம் காட்டி வருகின்றனர். முதல்வர் வருகையால் மாநகர பகுதி சாலைகள் புதுப்பொலிவு அடைகிறது. கடந்த பல மாதங்களாக பாதாள சாக்கடை உள்ளிட்ட பல்வேறு பணிகளால் சேதம் அடைந்திருந்த சாலைகளை பழுது பார்க்கும் பணிகளும் இரவு பகலாக முழு வீச்சில் நடைபெறுவதால் வாகன ஓட்டிகள் நிம்மதி அடைந்துள்ளனர்.

விழாவுக்கான ஏற்பாடுகள் மாவட்ட பொறுப்பு அமைச்சரும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சருமான கே. என். நேரு தலைமையில் மாவட்ட செயலாளர்கள் ஆவுடையப்பன், அப்துல் வகாப் எம்.எல்.ஏ., கிரகாம்பெல் ஆகியோர் பிரமாண்டமாக மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ்நாடு ஒரு ட்ரில்லியன் பொருளாதாரத்தை எட்டும்

## அமைச்சர் டிஆர்பி.ராஜா நம்பிக்கை

**சென்னை, டிச. 15-**

தமிழ்நாடு விரைவில் ஒரு ட்ரில்லியன் பொருளாதாரத்தை எட்டும் என்று நந்தம்பாக்கத்தில் நடந்து வரும் யுஇஎஃப் வர்த்தக உச்சி மாநாட்டில் அமைச்சர் டிஆர்பி.ராஜா உறுதிபட தெரிவித்துள்ளார்.

ஐக்கிய பொருளாதார மன்றத்தின் (யுஇஎஃப்) 3 நாள் வர்த்தக உச்சி மாநாடு, நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் தொடங்கியது. இதில் 20-க்கும் மேற்பட்ட தொழில்துறை நிறுவனங்கள், 6 ஆயிரம் பார்வையாளர்கள், 1,500 பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

யுஇஎஃப் பிரெசிடென்ட் அகமது புஹாரி சேர்மன் நவாப் சாதா ஆசிப் அலி, ஒருங்கிணைப்பாளர் முகமது அலி ஆகியோர் தலைமை தாங்கினர். மாநாட்டை தொழில்துறை அமைச்சர் டிஆர்பி.ராஜா தொடங்கி வைத்து. 200 அரங்குகளுடன் கூடிய வணிக கண்காட்சியைப் பார்வையிட்டார். 2047-ம் ஆண்டுக்குள் 4 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை தமிழகம் எட்டும் வகையில் 'உன்னத தமிழகம்' என்ற தொலை நோக்குப் பார்வை கொண்ட வரைவு திட்டத்தையும் வெளியிட்டார்.

மாநாட்டில் அவர் பேசிய போது, "இந்தியாவின் சராசரி பொருளாதார வளர்ச்சி 11 சதவீதம். மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களின் வளர்ச்சி 10-11 சதவீதமாக உள்ளது. அதே நேரம், தமிழகம் 16% பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. நிர்ணயித்துள்ள 1 ட்ரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை நோக்கி நாம் மிக வேகமாக பயணித்து வருகிறோம். விரைவில் அதை எட்டுவோம்" என்றார்.

வணிக வளர்ச்சிக்கு ஏற்ற மாநிலம் தமிழகம். புதிய சிந்தனை கொண்ட இளம் தலைமுறையினரையும் இதில் நாம் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று மாநாட்டுக்கு தலைமை வகித்த நிர்வாகிகள் கூறினர். மாநாட்டில் 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

# பிரதமர் மோடி இன்று ஜோர்டன் பயணம்

**புதுடெல்லி, டிச. 13-**

அரசு முறைப் பயணமாக ஜோர்டான், ஓமன் மற்றும் எத்தியோப்பியா நாடுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி இன்று பயணம் மேற்கொள்கிறார்.

பிரதமர் நரேந்திர மோடி, 2 நாட்கள் அரசு முறைப் பயணமாக ஜோர்டான் மன்னர் இரண்டாம் அப்துல்லாவின் அழைப்பை ஏற்று இன்று ஜோர்டான் நாட்டுக்குச் செல்வார் என மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியா மற்றும் ஜோர்டான் இடையிலான 75 ஆண்டுகால உறவுகளை முன்னிட்டு இந்தப் பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, நாளை (டிச.16-ம் தேதி) ஜோர்டானில் இருந்து எத்தியோப்பியா நாட்டுக்கு பிரதமர் மோடி செல்வதாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது. எத்தியோப்பியா பிரதமர் அபி அகமது அலியின் அழைப்பை ஏற்று பிரதமர் மோடி மேற்கொள்ளும் இந்தப் பயணத்தில் இரு நாடுகள் இடையிலான உறவுகள் குறித்த முக்கிய பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இறுதியாக, பிரதமர் மோடி டிச.17-ம் தேதி முதல் டிச.18-ம் தேதி வரை ஓமன் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாடுகள் இடையிலான உறவுகள் 70-ம் ஆண்டை எட்டியுள்ள நிலையில், ஓமன் நாட்டின் சுல்தான் ஹைதம் பின் தாரிக்கின் அழைப்பை ஏற்று பிரதமர் மோடி அந்நாட்டுக்குச் செல்கிறார்.

இந்தப் பயணத்தில், இந்தியா மற்றும் ஓமன் இடையிலான வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, பாதுகாப்பு, தொழில்நுட்பம் ஆகிய துறைகள் குறித்த பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகிறது.

# விடுபட்ட தகுதியானவர்களுக்கு.... (1-ம் பக்க தொடர்ச்சி)

நிகழ்ச்சி. அதேபோல மகளிர்களுக்கான கலைஞர் பெயரால் வழங்கப்படக்கூடிய மகளிர் உரிமைத் தொகை கூடுதலாக 17 லட்சம் பேருக்கு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளேன். இதனோடு ஏற்கெனவே 1 கோடியே 13 லட்சம் பேருடன் மொத்தமாக 1 கோடியே 30 லட்சம் பேருக்கு உதவித் தொகை வழங்கியுள்ளோம். இன்னும் தகுதியுடைய விடுபட்ட மகளிர்க்கும் நிச்சயம் வழங்கப்படும்.

ஜி.டி.பி. வளர்ச்சியில் இன்று தமிழ்நாடு தான் நம்பர் ஒன் மாநிலமாக உருவாகியுள்ளது என ரிசர்வ் வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது. எவ்வளவோ சோதனைகள், அந்த சோதனைகளை எல்லாம் தாண்டி தமிழக அரசு சாதனைகள் படைத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற திராவிட மாடல் ஆட்சி. எஸ்.ஐ.ஆர் பணியில் பம்பரமாக செயல்பட்டு கொண்டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். நமது வாக்குரிமையை நாம் காப்பாற்றி ஆக வேண்டும். அதற்காக எஸ்.ஐ.ஆர். பணிகளில் விழிப்போடு வேலை பார்த்திருக்கிறோம். அதே நேரத்தில் பாதி வேலை தான் முடிந்து இருக்கிறது. இன்னும் பாதி வேலை அப்படியே உள்ளது. தேர்தல் முடிந்து வாக்கு எண்ணிக்கை முடிந்து ரிசல்ட் அறிவிக்கும் வரை வேலை பாக்கியுள்ளது.

**வாக்குகளாக மாற்ற...**

தேர்தலுக்கு இன்னும் கொஞ்ச நாள்தான் உள்ளது. நமது சாதனைகள், திட்டங்கள், பணிகளை மக்களுக்கு கொண்டு சென்று வாக்குகளாக மாற்ற வேண்டும். 7-வது முறையாக திராவிட மாடல் ஆட்சி வந்தது என்ற நிலையை உருவாக்க வேண்டும். அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சராக இருக்கும்போது சட்டமன்றத்தில் பேசும் போது கண்ணியமாகவும், ஜனநாயக முறையிலும் பொறுப்பாக பதில் சொன்னவர் அன்றைய அமைச்சராக இருந்த பழனியப்பன் மட்டும்தான் என்றார். விழாவில் அமைச்சர்கள் எம்ஆர்கே.பன்னீர் செல்வம், சாமிநாதன், ராஜேந்திரன், சக்கரபாணி, மா.சுப்பிரமணியன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், முன்னாள் இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி மாநில பொது செயலாளர் ஈஸ்வரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம் திருவிடைமருதூர் பேரூராட்சி அலுவலகத்தில் கட்டப்பட்ட கூட்ட அரங்கம், சமுதாய கூடம், அங்கன்வாடி மையம் என ரூ.1.05 கோடி மதிப்பிலான 6 கட்டிடங்களை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு நேற்று உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் திறந்து வைத்தார்.



சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ஐக்கிய பொருளாதார மன்றத்தின் 3 நாள் வர்த்தக உச்சி மாநாட்டை தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தொடங்கி வைத்து 2047-ம் ஆண்டுக்குள் 4 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை தமிழகம் எட்டும் வகையில் 'உன்னத தமிழகம்' என்ற தொலை நோக்குப்பார்வை கொண்ட வரைவு திட்டத்தையும் வெளியிட்டார்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண்.8 அல்அமீன்நகர் பிரதான சாலை அழகர்கோவில் மெயின் ரோடு இணைப்பு பாலம் அமைப்பதற்கான பூமி பூஜை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்றது. அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன், மாமன்ற உறுப்பினர்கள் ராதிகா, முத்துக்குமாரி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



மதுரை மேற்குதொகுதிக்குட்பட்ட பழங்காநத்தம் 71-வது வார்டு தெற்குதெருவில் புதிய பேவர் பிளாக் சாலையின் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் ஜெயந்திராஜூ மற்றும் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் உசிலை ஜெயபால், சக்திவிநாயகர் பாண்டின், வி.பி.ஆர்.செல்வகுமார், பைக்காரா முத்துவேல், ஏ.பார்த்திபன், ஒட்டுனர் அணி திருமுருகன், கவிச்செல்வம், மார்க்கெட் மார்நாடு, பழங்காநத்தம் ராஜாராம், வக்கீல் பாலமுருகன், சி.ஆர்.கதிரவன், அசோக்குமார், லக்கிமுருகன், விக்ரம், லக்கி முனீஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.